# தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் – தொகுதி 1

# Thanjavur Taluk Inscriptions - part I

# தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் – தொகுதி 1


பதிப்பாசிரியர்
தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இஆப,
சிறப்பு ஆணையர்

உதவிப் பதிப்பாசிரியர்கள்
ஆ. பத்மாவதி - அர. வசந்தகல்யாணி
கல்வெட்டாய்வாளர்கள்



வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
2005

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title | THANJAVUR VATTAK KALVETTUKAL |
| Editor | Special Commission of Archaeology |
| Copy right | T.N. State Dept. of Archaeology |
| Subject | Epigraphy |
| Language | Tamil & English |
| Edition | First |
| Publication No. & Year | 161 & 2005 |
| Type Point | 12 |
| No. of Pages | xx + 152 |
| Paper Used | 80 Gsm. Maplitho |
| Price | **54/-** |
| Printed at | **Pavai Printers (P) Ltd.,**<br>Royapettah, Chennai - 600 014. Ph: **28482441** |
| Publisher | T.N. State Dept. of Archaeology,<br>Chennai - 600 008. |



TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
Acc No 11842
Date
MADRAS

417.7

## பதிப்புரை

வரலாறு என்பது இன்றைய அறிவியல் உலகிற்கும் தேவையான ஒன்று. எப்படி வாழ்ந்தோம் என்பது அறியப்பட்டால் எப்படி வாழவேண்டும் என்பது தெரியவரும். எனவே ஒவ்வொரு மனிதனுடைய, ஒவ்வொரு பொருளுடைய வரலாற்றையும் அறிய வேண்டுவது அடிப்படையான அவசியமாகும். மனித இனத்தின் வரலாற்றை அறிய நமக்குக் கிடைக்கும் பலவகை அடிப்படைச் சான்றுகளில் முதன்மையானது கல்வெட்டு. மனிதனின் நாகரிக, பண்பாட்டு வரலாற்றுக்கு அளவுகோல் கல்வெட்டு. மக்களின் எழுத்தறிவு வளர்ச்சியைக் கொண்டு நாகரிகமும், மொழித்திறமும் வரையறுக்கப்படுகிறது. எனவே வரலாறு படிப்போர்க்கு அடிப்படைச் சான்றாக அமைவது கல்வெட்டு. இந்திய வரலாற்றில் பெரும்பங்கு வகிக்கும் இக்கல்வெட்டுகள் பெரும்பான்மையும் தமிழகத்தில் காணப்படுவது பெருமைக்குரிய செய்தியாகும். கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள் மற்றும் செப்பேடுகளின் எண்ணிக்கையில் அறுபது விழுக்காடு தமிழகத்தில்தான் உள்ளன என்பது கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, இக்கல்வெட்டுகளைப் போற்றிப் பாதுகாப்பதன் மூலம் வரலாற்றைக் காப்பாற்ற வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அனைவர்க்கும் உள்ளது.

தமிழக அரசு இதனை உணர்ந்து தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பாதுகாப்பதோடு அவற்றையெல்லாம் தொகுத்து நூல்களாக வெளியிடும் சிறந்த பணியினைச் செய்து வருகின்றது. இத்துறையில் இப்பணி மிகப் பெரிய பணி என்பதால் அதனை வேகப்படுத்தும் வழியினைக் கண்டறிந்து கல்வெட்டு முனைப்புத் திட்டம் என்ற அதிவிரைவுத் திட்டத்தின்கீழ் 2004–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஏறத்தாழ 3,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. மேலும் இடையீடின்றித் தொடர்ந்து அவற்றை நூலாக வெளியிட வேண்டுமென்று அப்பணியும் செயற்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில், சில மாறுதல்களுடன் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் என்ற தலைப்பில் முதன்முதலாக 2004–ஆம் ஆண்டு கல்வெட்டுத் தொகுதி ஒன்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

துறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வெட்டுகள் படியெடுக்கபட்டு வந்தாலும் வெளியிடும் பணியில் சற்றுத் தொய்வு ஏற்பட்டது. ஆயின் தற்போது அவற்றைத் தொடர்ந்து வெளியிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2005–ஆம் ஆண்டின் முதல் தொகுதியாக வெளியிடப்படும் இத்தொகுதியில் உள்ள கல்வெட்டுகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1979, 1981, 1987–ஆம் ஆண்டுகளிலேயே படியெடுக்கப்பட்டு, படித்து முழுமையாக வைக்கப்பட்டிருந்தன. மொத்தம் 20 ஊர்களிலுள்ள 97 கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இத்தொகுதி தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் – தொகுதி 1 என்ற தலைப்பில் வெளியிடப்படுகிறது. இனி இவ்வரிசையில் தஞ்சாவூர்க் கல்வெட்டுகள் – தொகுதி 2, 3 எனத் தொடர்ந்து

வெளியிடப்படும். இத்தொகுதியில் மற்றொரு புதிய முயற்சியும் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கல்வெட்டுகளில் வரும் கிரந்த எழுத்துகள் இத்துறை அச்சகத்தில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அண்மைக் காலங்களில் தனியார் அச்சகங்கள் கிரந்த எழுத்துகளை அச்சுக் கோக்காமல் அவ்வெழுத்துகள் வருமிடங்களிலெல்லாம் தடித்த எழுத்துகளில் $க_1$, $க_2$, $க_3$, $க_4$ என்ற வகையில் அச்சிட்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க கிரந்த எழுத்துகள் மறைந்து விடும் நிலை ஏற்பட்டது.

அடுத்து கணினியில் தட்டச்சு செய்து புத்தகங்கள் வெளிவரும் இந்தக் காலகட்டத்தில் கிரந்த மென்பொருள் உருவாக்கப்படாமலிருந்தது. அதுவும் ஒரு பின்னடைவாகவே இருந்து வந்தது. இந்த நிலையினை மாற்றி வரலாற்றுணர்வு கொண்ட ஐஐடி கணினிப் பிரிவுப் பேராசிரியர் முனைவர் கல்யாணகிருஷ்ணன் அவர்கள் கிரந்த எழுத்துகளை நன்கறிந்த அறிஞர்களைக் கலந்தாலோசித்து அதற்கென ஒரு மென்பொருளை அண்மையில் உருவாக்கினார். அவர் தம்முடைய மென்பொருளை எம் துறைக்கு அளித்து அதனைப் பயன்படுத்தும் முறையினையும் கற்றுத் தந்தார். அந்த வகையில் ஒரு பெரிய வரலாற்றுக் கடமையினை ஆற்றிய பேராசிரியர் அவர்களுக்கு முதலில் நன்றி கலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரந்த மென்பொருளைத் துறைக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று முழுமுயற்சியோடு ஈடுபட்டு அப்பணியினை முடித்த கல்வெட்டாய்வாளர் முனைவர் சு.இராஜகோபால் மற்றும் நூலகர் திரு இரா.சிவானந்தம் ஆகியோரை மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்நூலில் இடம் பெறும் கல்வெட்டுகளைப் படித்ததோடு கணினியில் முதன்முறையாகத் தேவையான இடங்களில் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தும் முயற்சியில் இடையறாது ஈடுபட்டுச் சிறப்பாகப் பணி செய்த கல்வெட்டாய்வாளர்கள் முனைவர் ஆ.பத்மாவதி, திருமதி அர.வசந்தகல்யாணி ஆகியோருக்கு என் வாழ்த்துகள்.

இப்புத்தகத்தைக் கணினியில் புத்தக வடிவில் தட்டச்சு செய்து தந்த திருமதி பா.வளர்மதி, சுருக்கெழுத்துத் தட்டச்சர், திரு இரா.கோபு, நிலை உயர்த்தப்பட்ட உதவியர் மற்றும் இந்நூலில் இடம்பெறும் நிழற்படங்களை எடுத்த நிழற்படக்காரர் திரு மு.த.ஸ்ரீதரன், ஆகியோரைப் பாராட்டுகிறேன்.

வரலாற்று அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் அடிப்படைத் தரவுகளாக உள்ள இக்கல்வெட்டுகளைப் படித்துப் பயனுறுவர் என்பதில் ஐயமில்லை. அதன்மூலம் தமிழக வரலாறு புதிய தரவுகளுடன் வலம் வரும் என்பதிலும் ஐயமில்லை.

சென்னை – 113
நாள் : 23.02.2005

தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,
சிறப்பு ஆணையர்

## முன்னுரை

தஞ்சை வட்டக் கல்வெட்டுகள் என்ற இத்தொகுதியில் மொத்தம் 21 ஊர்கள் இடம் பெற்றிருக்கின்றன. திருவேதிக்குடிக் கல்வெட்டுகள் அனைத்தும் கி.பி.9- 10ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுகளில் கூறப்படும் கோஇராஜகேசரிவர்மன், கோப்பரகேசரிவர்மன் ஆகிய மன்னர்கள் முறையே முதலாம் ஆதித்தசோழனாகவும், முதலாம் பராந்தகசோழனாகவும் இருத்தல் வேண்டும். கோயிலில் இரவு ஸ்ரீபலி நிகழ்ச்சி எவ்வாறு நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக ஒரு கல்வெட்டு (எண் 7) அமைந்துள்ளது. முதலாம் ஆதித்தசோழன் காலத்தில் இறைவனுக்கு (எண் 8) வாள்கள் பரிசளிக்கப்பட்டிருக்கின்றன.

புதலூர்க் கல்வெட்டுகளில் செங்குளத்தூர் பட்டாரகி என்ற இறைவிக்கு அளித்த நிவந்தங்கள் பற்றிப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. புதுக்கரியாப்பட்டி கல்வெட்டொன்று இடங்கை தொண்ணூற்றெட்டுச் சாதிகளைக் குறிப்பிடுகிறது.

கரந்தைக் கல்வெட்டுகள் அனைத்துமே வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பரகேசரிவர்மன் காலத்தில் (எண் 2) சிவன்கோயிலைச் சேர்ந்த சிவப்பிராமணர்கள் இருவர் தங்கள் 30 வட்டத்துக் காணியைப் பிடாரி கோயிலுக்கும் நந்திமாகாளி கோயிலுக்கும் விற்றுக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. இது மிகவும் அரிய செய்தி. அதுபோலக் காணி நிலங்கள், தலை, இடை, கடை எனத் தரம் பிரித்து அனுபவித்தது பற்றித் தெரிவிக்கின்றது (எண் 3). இவ்வூரில் முதலாம் இராஜராஜன் முன்னிலையில் வில்வித்தை நடைபெற்றது. அதில் ஈடுபட்ட இருவரில் ஒருவன் இறந்து விட, அவன் உறவினர்கள் இவ்வூர்க் கோயிலுக்கு விளக்கெரித்திருக்கின்றனர். முதலாம் இராஜராஜன் ஆடவல்லான், மற்றும் நம்பிராட்டியார் மகாபரமேஸ்வரி ஆகிய செப்புத் திருமேனிகளைச் செய்தளித்துள்ளான். அதற்குச் சந்தி விளக்கு எரிப்பதற்கும் தானமளிக்கப்பட்டிருந்தது. பிராமண ஊர்களில் பிராமணர்களின் பிரமதேய நிலம் மற்றும் பிற சாதியினரில் தானமாகக் காணி பெற்றிருந்த நிலம் ஆகியவற்றைத் தவிரப் பிறரது நிலங்கள் கட்டாயமாக விலைக்கு வாங்கப்பட்டுக் கோயிலுக்குக் கொடையளிக்கப்பட்டிருந்த செய்தி வரலாற்றுச் சிறப்புடையது (க.எண்.6).

கோப்பரகேசரிவர்மன் காலத்தில் கொடுக்கப்பட்ட விளக்குத் தானம் பிற்காலங்களில் காலங்களில் நின்று விட, முதலாம் இராஜராஜன் காலத்தில் இக்கோயில் அதிகாரி அதைக்கண்டு அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைத்து, உங்கள் முன்னோர்கள் செய்யாது விட்ட அந்தப் பணியை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும் எனப் பணித்ததை ஒரு கல்வெட்டு (எண் 8) தெரிவிக்கிறது.

இராஜேந்திரம் என்ற அம்மன்பேட்டையில் பாண்டியர் காலத்தில் கோயில் வழிபாட்டுக்குத் திருநாமத்துக்காணியாக நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்நிலத்தைப் பயிர் செய்த பிராமணன் வரியளிக்க முடியாமல் ஓடிப்போய் விட்டமையால் அந்நிலம் மீண்டும் கோயில் வசமாயிற்று.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் அவர் பெயரில் வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை வெண்டையாம்பட்டிக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

வல்லத்தில் சோழ பாண்டியர் ஹொய்சளர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கரிகால சோழன் பெயரில் சிவன் கோயிலும், காளி கோயிலும் அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கதாக உள்ளது. அரிகுலகேசரி ஈஸ்வரமுடையார் என அரிஞ்சயசோழன் பெயரிலும் ஒரு சிவன் கோயில் இருந்தது என்பதற்கான சான்றுகள் இவ்வூர்க் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேஸ்வரர் இச்சிவன் கோயில் சைவாச்சாரியர் ஆலிலுத்தேவன் பற்றிய செய்திகள் குறிக்கப்படுவது சிறப்புடையது. விக்கிரமசோழன் காலத்தில் இவ்வூர் சிறந்து விளங்கியிருந்திருக்கிறது. விக்கிரமசோழ விண்ணகராழ்வார் என்ற பெயரில் விஷ்ணு கோயில் எடுக்கப்பட்டிருந்தது. இக்கோயிலுக்கு நிவந்தம் அளிக்கப்பட்ட 40 வேலி நிலம் தியாகசமுத்திரநல்லூர் என்ற பெயரில் வழங்கப்பட்டிருந்தது. ஒரு பாண்டிய காலத்தில் ஆடித்திருநாள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அப்போது இறையுருவங்களை யாகமண்டபத்திலும் மடைப்பள்ளி மண்டபத்திலும் எழுந்தருளிச் செய்யப்பட்டதுடன் **திருமதிளிலே மேயவும்** என்று கூறப்பட்டிருப்பதும் **திருக்கொட்டுத் திருநாள்** என்பதும் புதுமையான செய்திகள். வல்லம் என்ற இந்த ஊர் பாண்டியன் கல்வெட்டொன்றில் கருவுகுலவல்லம் என்றழைக்கப்பட்டிருக்கிறது.

கோயில்பத்து என்ற ஊரில் உள்ள கல்வெட்டொன்றில் விஜயாலய முத்தரையன் என்பான் குலோத்துங்கசோழீஸ்வரம் என்றொரு கோயிலை புதலூரில் எடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. கோனேரின்மைகொண்டான் என்று தொடங்கும் இக்கல்வெட்டு குலோத்துங்கசோழனுடையதாக இருக்க வேண்டும். இக்கோயிலுக்கு வேண்டிய நிலமும் புதலூரில் கொடுக்கப்பட்டு அச்செய்தி இவ்வூரிலுள்ள கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு பாண்டிய மன்னன் கல்வெட்டொன்றும், மராட்டிய சரபோஜி கல்வெட்டொன்றும் உள்ளது.

நாஞ்சிக்கோட்டையிலுள்ள கல்வெட்டு கி.பி.1741–ஆம் ஆண்டைச் சார்ந்தது. அவ்வூரிலுள்ள 29 குடி மண்ணையார்கள் குடும்பத்தையும் ஸ்ரீரங்கத்தைச் சார்ந்த ஒருவருக்குத் தர்மமாக அளித்தது பற்றிக் குறிப்பிடுகிறது.

பள்ளிஅக்ரஹாரத்திலுள்ள கல்வெட்டுகள் கி.பி.18, 19–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுகள் வெண்ணாற்றங்கரை மேம்பாலம் கட்டியது பற்றிக் கூறுகின்றன.

தஞ்சாவூர் நகரில் ராஜாகோரி என்ற இடம் மராட்டிய மன்னர்களின் கல்லறை அமைந்த பகுதி. இங்கு மராட்டியமன்னர் மற்றும் அரசியர் சமாதிகள் அமைந்துள்ளன. அதில் அவர்களின் பெயர், இறந்த வருடம், மாதம் தேதி ஆகியவை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு முறைகளிலும் தரப்பட்டுள்ளன. இந்தக் கல்லறைகள் சிறுசிறு

கோயில்களாகவே கட்டப்பட்டுள்ளன. பள்ளிப்படைக் கோயில்களோடு இதனை ஒப்பு நோக்கலாம். அதோடு இச்சமாதி கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட தேதியும் கல்வெட்டுகளில் தரப்பட்டுள்ளது. இச்செய்திகளைக் கூறும் ஒன்பது கல்வெட்டுகள் இத்தொகுதியில் உள்ளன.

இத்தொகுதியில் உள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் வரலாற்று ஆர்வலர்கள் படித்துப் பயனுற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

ஆர். பத்மாவதி, அர. வசந்தகல்யாணி
உதவிப் பதிப்பாசிரியர்கள்

# ஆங்கிலக்குறிப்புரை
# Summary

**Rajendram [ Ammanpettai]**

Two inscriptions are found in the Rajendram Siva Temple, which belong to the period of Pandya dynasty. The first one refers to the Pandya king Maravarman Kulasekara -I and in the second the name of the king is not given. And it might also belong to the same king. The first one records to the gift of land as tax free to the temple of Mutheesvaramudaiyar at Rajendrachola Nallur by the assembly of Virudharaja Bhayankara Chaturvedimanglam for the renewal of worship which was obstructed due to same reasons.

The second record registers the gift of half ma of land exempted from tax as Thirunamathukkani to the temple. This was given in addition to the earlier one because the Sivabrahmanas who could not pay the tax, ran away due to the failure of crops and as a result the worship was discontinued by the temple authorities.

**KADUVELI**

Two inscriptions are copied from Akasapurisvara temple at Kaduveli. A 1898 A.D.inscription of this temple is well preserved and another fragmentary inscription which belongs to the Chola Rajaraja III· seems to be worn out.So this record is taken from "A Topographical list of the inscriptions of the Madras Presidency" Volume.11.No.1175.B.

Records Rajaraja chola III mentions a grant of land to the deity of this temple. Regarding the another one it is said that 50 Rupees were deposited to maintain and cultivate flower plant in the flower garden to the deity from the interst of it by certain Maruthaiya pillai, a Vellala of Panaiyur.

**CHITRAKUDI**

Two inscriptions are copied from the Siva temple of this village. The first one refers certain Kachchiyappa Mudaliyar, son of Kalaththinatha Mudaliyar constructed a suvamiyar temple lin this village and the second one mentions Nayina Mudaliyar who was working as a secretary under Achchuthappa Nayaka, a famous Nayak King of Thanjavur.

**THANJAVUR RAJAGORI**

This is the place when the Maratha King Sivaji Raja and his wives memorial Tombs were erected in the shape of small saivite temples. King's Tombs is encircled by relatively small twelve tombs. Among these twelve, nine are having the inscriptions which mention the names of the king's wives and the dates of death both in Tamil and English calender systems.

**THITTAI**

Thittai inscriptions reveal the endowment of land for the festival and daily worship for the udaiyar temple at Tenkudi Thittai placed under the responsibility of the temples authorities.

**THIRUVEDIKKUDI**

Thirteen inscriptions of Vedapurisvara temple of this village are published in the S.I.I Volume IV. All the records are in tamil language and script. The early chola kings were simply mentioned as Rajakesari and Prakesari in the inscriptions. Most of the inscriptions are identified as belong to the periods of Aditya chola and Parantaka chola I respectively with the aid of palaeography.

Many kinds of denotions were made to this temple. ie., golden articles, gold and paddy for burning lamps, gift of vessels called Attanikkal Kadaram, GarudaThookku Vilakku and Thara Thookku Vilakku.Some arrangements were made for conducting the Sribali worship at night to the deity by the temple administrator called meenavan who was a chief of vilattur Nadu by the order of the king. The arrangements were as follows: providing oil for 30 lamps other essentials for four lamp bearers, two garland makers, three persons to maintain the flower garden, a person to cook the food to be offered to the deity and four persons to blow the kalam, a musical instrument.

**PARUTHTHIKKUDI**

Only one records is found in this temple and it belongs to the period of the Maratha king Maharaja saheb which state the gift of land in Paruththikkudi for providing food offerings in the all the sandhis to the deity of panchanadisvara temple at Thiruvaiyaru.

**PALLI AGRAHARAM**

Three records copied from a bridge across the river Vennaru at Vennatrangarai, reveal the same message in Tamil, Marathi and English languages and in Tamil, Nagari and English scripts respectively. States that this bridge was constructed by Sivaji Raja Chatrapathi saheb when Lt Colonel Lie' cl , col Macleen was staying at Thanjavur.

**VALLAM**

In Vallam 13 records are copied from Cholisvarasamy temple at the fort. They belong to the Pandya, Chola and Hoysala dynasties. Out of 13, twelve records are found in Tamil ie., both Language and script. Only one record seems to be engraved in the Sanskrit language and the Grantha script. All the records belong to the period of 13,14th centuries AD only.

The Siva temple and Kali temple were named after Karikala chola, the founder of the chola dynasty, i.e, Karikalacholisvaram and Karikalachola Makali. Another Siva temple also existed there in the name of Arikula Isvaramudaiyar, the name of Arinjaya chola, who ruled from 954 to 960 A.D And only one Vishnu temple in the name of Vikrama chola Vinnagar is known from one of the inscription here.

The records of this Village reveal that this Vallam was called as Eriyur Vallam and Karuvu kula vallam. Karuvu kula must be the original form of Karuvulam i.e. treasury. In 12th to 14th centuries A D. Vallam seems to have functioned as a mercantile center. So tax was collected for each and every bundle of paddy and salt, and the tax amount was utilised for the worship in this temple. We come to know that the Adi festival was celebrated in the temple in the period of one of the Pandya kings. During that festival the idols were placed in the Yaga (sacrifice) mandapa, Adukkalai mandapa (kitchen) and also carried through the Thirumathil i.e, the compound wall. Another festival called Thirukkottu thirunal is also mentioned.

**KARANTHAI**

All this inscriptions of this village are historical important. We have a unique reference in one of them i.e, the Sivabrahmanas of the Siva temple sold their shares of their Kani called 30 terms in a single month (muppathu vattathu kani) to the temples of Pidary and Nandhi Makali. The name of the goddess Nandhi Makali is also a unique reference for art historians. Lands given to the temple servants for their lively hood by the temple, was called kani. These lands were divided according to their standard as thalai, idai and kadai i.e, first, second and third qualities. Another interesting information is a performance of martial art which took place in front of the king Rajaraja chola I. Two heroes who were experts in archery showed their valour through a competition among themselves. During this occasion one of them accidentally died, the relations of the slain individual offered lands for burning lamps in the temple.

In the temple of Vasishtesvara, the idols of the deity Adavallan and his consort Mahaparamesvari were installed by the king Rajaraja chola-I and the provision also made for burning sandhi (twilight) lamp to the deities. Another historically important inscription of Rajaraja chola- I reveals that an order was issued for the compulsory sale of lands in the Brahmana village, except the lands of Brahmana and the lands which were owned as service tenure(kani) others lands were sold to Kundhavai pirattiyar, the elder sister of the King and later donated it to this temple.

Another important inscription of this temple is regarding temple audit, in the time of Rajaraja chola I. The inscription which refers to an endownment for a lamp made during the period of the previous king Kopparakesari was discontinued due to negligence, but during the rule of Rajaraja I the temple authorities found out this mistake and called the descendants of the donee and ordered them to continue to burn the lamp which was stoped by their predecessors.

**KOYILPATHTHU**

In Koyilpaththu one of the inscriptions states that a chief named Vijayalaya Mutharaiyan erected a temple called Kulottungacholisvaram in Budhalur and provided grant of land to the temple.

**PUDUKKARIYAPATTI.**

One of the records of this village mentions 98 caste of Idangai.i.e. regiments.

**PUDUCHATTIRAM**

It is a bilingual record .It refers to the gift of land for daily offerings to the temple of Sri Venugopalaswamy.

**BUDHALUR**

Sengulattur Bhattaraki, i.e. goddess Kali is specially referred to in many records of this village.

**PONVILAINDHANPATTI**

This inscription is found engraved in a separate stone inside a tank. It belongs to the period of the Pallava king Nandhivarman-III and it refers to a Jaina palli of this village.

**VENDAIYAMPATTI**

In the period of Krishnadevaraya, donation of lands were made to conduct a speciall Sandhi in the name of the King. Arrangements were made for special offerings on this occasion, food offerings at the time of festivals and renovation works to be carried out in the temple of Thanthonrisvara.

**NIYAMAM**

Five inscriptions are copied from Niyamam Airavatesvara temple. All are fragments. Language and Script are in Tamil, 10th century characters.

One of the fragment refers to the Mahadeva of Thiruviranisvaram to the gift of land, special festival on the occasion of Aippasi Visu (first day of the Month Aswathi) gilft of sheep for burning lamps and measuring rod Pathinaru San Perunkol.

**MARUVUR**

A mutt called Thirugnanasambandhar, which was situated in the north side [Thirumadaivilagam] adjacent to the precints of the temple. This mutt was headed by the pontiff Thirugnanasambandha Mudaliyar. In the period of Chola King Rajendra III, $23^{1/2}$ Kuli of house site, 1 ma and mukkani of cultilvable lands were denoted at 1249 A.D in the name of this pontiff. This record is found in the Pasupathisvara temple of this village.

**NANJIKKOTTAI**

Inscription belongs to the perilod of 1741 A.D. It states that the twentyfour families of Mannaiyars donated themselves to certain person of Sri Rangam.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | | v - vi |
| முன்னுரை | | vii - ix |
| ஆங்கிலக் குறிப்புரை (Summary) | | xi - xv |
| 1. | இராஜேந்திரம் | 1 - 3 |
| 2. | கடுவெளி | 4 - 6 |
| 3. | சித்ரகுடி | 7 - 9 |
| 4. | தஞ்சாவூர் | 10 - 18 |
| 5. | திட்டை | 19 - 22 |
| 6. | திருவேதிக்குடி | 23 - 38 |
| 7. | பருத்திக்குடி | 39 |
| 8. | பள்ளி அக்ரஹாரம் | 40 - 42 |
| 9. | வல்லம் | 43 - 62 |
| 10. | கரந்தை | 63 - 91 |
| 11. | கோயில்பத்து | 92 - 100 |
| 12. | பழைய ஆர்க்காடு | 101 |
| 13. | புதுக்கரியப்பட்டி | 102 - 109 |
| 14. | புதுச்சத்திரம் | 110 - 111 |
| 15. | பூதலூர் | 112 - 121 |
| 16. | பொன்விளைந்தான்பட்டி | 122 - 123 |
| 17. | வெண்டையாம்பட்டி | 124 |
| 18. | நியமம் | 125 - 132 |
| 19. | மருவூர் | 133 - 134 |
| 20. | நாஞ்சிக்கோட்டை | 135 |

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண்.1/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | இராஜேந்திரம் (அம்மன்பேட்டை) | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 626/1962–63 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: சிவன் கோயில் கருவறை மேற்கு குமுதம்.

குறிப்புரை: இராசேந்திரசோழ நல்லூர் உடையார் பொதுமுத்தீஸ்வரமுடையார் கோயில் திருநாமத்துக் காணியான நிலங்கள் பயிர் விளைச்சலின்றிப் போனமையில் அதற்கான நெல் முதலானவற்றை இறுக்க மாட்டாமையினால் அக்கோயில் சிவப் பிராமணன் ஓடிப் போய் விட கோயில் வழிபாட்டில் தடை ஏற்பட்டது. மீண்டும் கோயிலில் வழிபாடு, விழாக்கள் நடத்துவதற்குத் திருநாமத்துக்காணியாக அரைமா அரைக்காணி நிலத்தை அவ்வூர்சபையார் இறையிலியாகக் கொடுத்த செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ விருதராச பயங்கரச் சருப்பேதி மங்கலம் பன்னிரண்டாவது
கும்ஹநாயறு முதல் *ஸ்ராம* கார்யஞ் செ[ய்]கிற [கூ]ட்டப் பெருமக்கள் எழுத்து
நம்ஹூர் கணக்கு

2) புலிவலமுடையான் சீராம *விஜ*யன் கண்டு நம்ஹூர் பிடாகை இராசேந்திர சோழ
நல்லூர் உடையார் பொதுமுத்தீ[*ஸ்வ*ர]முடைய நாயனார் திருநாமத்துக் காணியான

3) நிலங்கள் அருபியாய் வரிசை செல் [லாதேஇன்] நிலத்துக்கு ஊர் மரியாதி இறுக்கப்
பற்றாமையாலே இக்கோயிலில் சிவப்பிராமணன் ஓடிப்போயி பூசை செலுத்தாதே
கிடக்கையில் பெரு

4) மாள் திருமேனி கல்லியாண திருமேனியாகவும்.. [ *ஸு* .... *ஹஸ்த*ய் யா*நஸ்ா* ]ளாகவும்
இன்நாயனாக்கு பூசை செல்ல இன்நாயனார் திருநாமத்துக் காணியான நிலங்களில்
பாவதிக்கு மேற்கு வேளான் வாயிக்காலுக்கு தெற்

5) க்கு முதல் கண்ணாற்உரு* ௩ ஆம் சதிரத்திலும் ௪ நாலாஞ் சதிரத்திலும்
மிகுதி குறை உள்ப்பட ௫-௰௨௳ இன்னிலம் அரைமாவரைக் காணியும்
இன்னாயனாற்க்கு பூசை இறையிலியாக குடுத்தோம் இன்னிலம் ௰௨ ஆவது

6) முதல் இறையிலியாக பேசி கணக்கிலே நிறுத்திச் செய்யக் கடவன்னாகச் சொன்னோம். இப்படி செய்கை பணியால் ஊர்க்கணக்கு உத்தமபிரியன் எழுத்து நிலம் அரைமா அரைக்காணி சீரங்கநாத பட்டஸ்ய இருஷி கேஶவ ஹட்டஸ்ய

7) வினாயக ஶாஸ பட்டஸ்ய நிலம் அரைமா அரைக்காணி விஷ்ணு ஹட்டஸ்ய வேணைய் பட்டஸ்ய சீராம ஹட்டஸ்ய யஜ்ஞமுத்தி ஹட்டஸ்ய நிலம் அரைமா அரைக்காணி கத்தகுடி ஹட்டஸ்ய மஹாதேவ ஹட்டஸ்ய மஹாதேவ ஹட்டஸ்ய வன நாயக ஹட்டஸ்ய

8) தக்ஷிணாமுத்தி ஹட்டஸ்ய மஹாதேவ ஹட்டஸ்ய கந்தகுமார ஹட்டஸ்ய

[கண்ணாற்உரு* என்றுள்ளது. அதன்னக் கண்ணாற்று ரு (நிலம்) எனப் படிக்கலாம்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 31 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | 1298–99 |
| ஊர்: | இராஜேந்திரம் (அம்மன்பேட்டை) | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 625/1962–63 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | முதலாம் மாறவர்மன் குலசேகர தேவர் | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: சிவன் கோயில் கருவறை தெற்குப்பட்டி

குறிப்புரை: உடையார் பொதுமுத்தீஸ்வரமுடையார் கோயிலில் பூசை முதலானவை நடைபெறாமல் போனமையினால் மீண்டும் பெருமாள் திருமேனி கலியாண திருமேனியாகவும், பூசை முதலாவை நடைபெறவும் திருநாமத்துக்காணியாக அரைமாக்காணிக் கீழ் நாலுமா நிலம் இவ்வூர் சபையாரால் இறையிலியாகக் கொடுக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகரதேவர்
கு யா[ண்டு] ३யக ஆவது அகரம் ஸ்ரீ காடவன் மஹாதே

2) . . விருதராஜ ஹயங்கரச் சருப்பேதி மங்கலம் . . . நாயறு முதல் ஶ்ரா௨
[கா]ர்யஞ் செய்கிற கூட்டப் பெருமக்கள் . . .

3) . . . பிடாகை இராசேந்திர சோழநல்லூர் உடைய பொது முத்தீஸ்வரமுடையார்
கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்க். .

4) இந்த ஊர் உடையார் பொதுமுத்தீஸ்வர௨ உடையார் [க்]கு [மு]ன்பு
இறையிலியாக குடுத்த நிலத்தின். . . .

5) சை நடவாமல் பெருமாள் திருமே[னி கல்லியா]ண திருமேனி யாகவும். . .
உடையார் தொண்டைமானர்க்கு

6) ஜே. . . ௨ாகவும் ஶ்ரா௨த்துக்கு அற. . ய. . .வும் இன் நாயனார்க்கு பூ[ஜை]
க்கு இறையிலியாகக் குடுத்த பிடாகையா[ன]

7) இராசேந்திரசோழ நல்லூரில் ச[வ]தி வதி கு. . . வாய்க்காலுக்கு முதல்
கண்ணாற்று இண்டாஞ் சதிரத்து இந்த

8) . . .நாயனார் திருநாமத்துக்காணியான இக்கோயிலுக்கு தெற்கு[ம்] வடக்கும் தடி
இரண்டினால் பரி உள்பட ൨ மா൳ கீ൳ ൳ இந்நிலம் அரைமா அ

9) ரைக்காணிக் கீழ் நாலுமாவும் இவ்வாண்டு கார் முதல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1898 |
| ஊர்: | கூடுவெளி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: ஆகாசபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தென்புறச் சுவர்

குறிப்புரை: தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கூடுவெளி கிராமத்திலிருக்கும் ஆகாசபுரீஸ்வரர் கோயிலில் தென் பக்கத்திலிருக்கும் நந்தவனத்தை விருத்தி செய்து இறைவனுக்குப் படைக்கப் பலவித பூச்செடிகளைப் பயிரிடுவதற்காகப் பனையூரிலிருக்கும் மருதையா பிள்ளை மகன் வெள்ளாளச் சாதியைச் சேர்ந்த குப்ப பிள்ளை, சூரிய மூர்த்தி குருக்களிடம் 50 ரூபாய் கட்டினார். அதிலிருந்து வரும் வட்டியினைக் கொண்டு இந்த நந்தவனப் பரிபாலனம் நடந்து வர வேண்டுமென்றும் இடையில் தடங்கல் ஏற்பட்டால் வேறு யாரேனும் எடுத்து நடத்த வேண்டுமென்றும் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

அ

1) 1898 டிசம்பற்

2) தஞ்சாவூர் ஜில்லா

3) முகாசா கூடுவெளி கிறாமத்

4) திலிருக்கும் ஸ்ரீஆகாச

5) புரியீசுவற ஸாமிக்கி ப

6) னையூரிலிருக்கும் மருதையா

7) பிள்ளை மகன் வெள்ளாழச் சாதி

8) க்குப் பிள்ளை யெழுதி வைய்த்த

9) த் தருமம் ஷை கோவிலுக்குள் தென்

10) [வட]லும் பிறகாறத்தில் கீழ் மேல்

11) ௲ ௰ கெசம் தென்மடல் ௨ ௰ கெ

12) சம் யி[த]ற்க்குள் யென் [னா] ல் போ. . .

13) பட்ட நந்தவனம் பல சாதி புஷ்

14) ப்ப செடிகள் வைத்து விறு

15) த்தி செய்ய வேண்டியதர்க்

16) கு கோவில் பூசை தானிகம் உள்

17) ள சூரியமூற்த்தி குருக்களிடத்தி

18) ல் நாள் ௪ தேதியின் மவுண்டா

19) கட்டியிருக்குரது ரூ ரு௰

20) யிந்த அம்ப[து]* ரூக்கி கீ

21) [௵]க்கு வட்டி ரூ ௯ யிந்

22) த ரூ கொண்டு சந்தறன் சூ

23) ரியான்னுள்ள வரையிலும் தா

24) ங்கலும் தானத்திர்க்கும

25) னவரும் பாத்தியஸ்தர்களும் ஷை

26) நந்தவன பரிபாலனத்தை நடத்திவர வே

27) ண்டியது யிந்த பிறாகாறம் நடத்தா

28) மல் நந்தவனம் பறாரியாகும் பக்ஷ

29) த்திள் எவரேயெந்த புண்ணிய

30) புருஷர்கள் ஷை வட்டி அமுசத்தை

31) பற்றி கேழ்குரவர்கலுக்கு மு

32) காந்திரம் சொல்லி ஷை நந்

33) தவன தருமத்தை நடத்தும்படி

34) செய்ய வேண்டியது

ஆ

1) . . மாவும் இருபத்து இரண்டா. .
2) . . டவும் இந்நிலத்தால் பற்றுக். .
3) . . மார் திருமஞ்சன பெருவழிக்கு மே. .
4) . . சோழன் மடத்துத் தேவதான இ
5) . . மங்கலமுடையான் கணக்[கன்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 14 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.12 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கடுவெளி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | A Topographical list of inscriptions of the Madras Presidency Vol.II No.1175-B |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | பாகம் – II எண் 580 |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | [மூன்றாம் இராஜராஜன்] | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

**இடம்:** ஆகாசபுரீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச்சுவர்

**குறிப்புரை:** தற்போது இக்கல்வெட்டு பெரிதும் சிதைந்துவிட்டது. ஆயின் இக்கல்வெட்டு தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம் 2–ல் காணப்படுகிறது. அதன் வாசகம் மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் மூலவாசகம் முழுவதும் இல்லாததால் திருந்திய வடிவத்தைக் கொடுக்க இயலவில்லை. இராஜராஜனுடைய பதினாலாவது ஆட்சியாண்டில் இக்கோயில் இறைவனுக்கு நான்கு மா நிலம் அளிக்கப்பட்ட செய்தியைக் குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1) *தி* *ரு*வன சக்கரவிருத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு *ய௪*

[ஆ] வது *வ்ரூஸ்*சிக [ஞ]*ாயற்று பூறுவ பட்சத்து பிரதமையும் சநிக் கிழமையும்

பெத்த பூராடத்து னாள் .பாண்டியகுலாசனி வளநாட்டு [. . .] இன்னாட்டு

நாயினார்களுக்கு இக்கோயில் பஞ்சாபகேசக் காயால் யெண்டும் என்றும்

மகாதெவாயாகிய இன்னாயநார் புராநா சொடய மாயி [கீழ்க்காணி] மேல்

இன்னாட்டு இவ்வூர் கலத் துணின்றும் மகாமபிர நிலம் எ–ல் இக்கோயில்

இன்னாயநார்களுக்கு நாலுமாவும் இருபத்து ரெண்டாவது. . .யாகடெவும்

இந்நிலத்தால் வர பத்துக் கொண்டு கட [. . .] வுடையார் திருமஞ்சனபருவழிக்கு(1)

மொரி தாலதரில் சொழன் பட்டத்துத் தேவதாநமக்கு குதியாம நுலமுடையான(2)

கண்காடி நவதலெ முக்காலே மூனு மாக்காணி [. . .] றவு கடவதாக பெறவெலும்

மெயட இப்படி செயக்கடவதாகவெ படாயார வெந்த இவ்வூர் என்னுங்கராயன்

எழுத்து. இவை புரவுவரி ராஜராஜன் பறததுனார் எழுத்து. இவை காங்கையன் எழுத்து

1) 'திருமஞ்சனப் பெருவழி' என்றிருத்தல் வேண்டும்
2) 'மங்கலமுடையான்' என்றிருத்தல் வேண்டும்

த.நா.அ. தொல்லியல் துறை　　　　　　　　　　தொடர் எண். 5/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி 16,17–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | சித்ரகுடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 103/1946–47 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: சிவன் கோயில் விநாயகர் சன்னதி வாயிற்கல்

குறிப்புரை: இங்குள்ள விநாயகர் சன்னதியை நளவருடம் சித்திரை மாதம் வல்லைப் பாக்கத்ததைச் சேர்ந்த மாகாளத்திநாத முதலியார் மகன் கச்சியப்ப முதலியார் கட்டுவித்தார் என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) நள ௵ சித்திரை [௴] ரு ௳ வல்லையப்பா

2) க்கம் ம[ா] * காளத்திநாத முதலியார் புத்திரன்

3) கச்சியப்ப முதலியார் தன்மம் சுவாமியார் கோவில்

த.நா.அ. தொல்லியல் துறை | தொடர் எண். 6/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | ஸ்ரீமுக வருடம் தை மாதம் |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | சகம் 1485 கி.பி.1563 |
| ஊர்: | சித்ரகுடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 102/1946-47 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | விஜயநகரர் | | |
| அரசன்: | சுதாசிவராயர் | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

**இடம்:** சிவன் கோயில் கோபுரவாசல்

**குறிப்புரை:** கல்வெட்டின் பிற்பகுதி பெரிதும் சிதைந்துள்ளது. ஏதோ ஒரு தானத்தைக் குறிப்பதாக இருக்கிறது. நயினா முதலியரர் என்பவர் அச்சுதப்ப நாயக்கருடைய காரியகர்த்தாவாக இருந்தவர் என்பதும் இக்கல்வெட்டின் மூலம் அறியப்படுகிறது.

**கல்வெட்டு:**

1) ஸ்வஸ்தி மன்
2) மஹாமண்ட
3) லேஸ்வரன்
4) ராசாதிராசன்
5) ராசபரமேஸ்வ
6) ரன் சதாசிவ
7) தேவ மஹாராயர்
8) பிரிதி ராச்சியம் ப
9) ண்ணி சகாத்தம்
10 ௲சாரு மேல்
11) செல்லா நின்ண
12) ஸ்ரீமுக ௵ தை
13) மீ ௳ ஸ்ரீமத் அ
14) ச்சுதப்ப நாயக்கரய்யன்
15) காரியத்து
16) க்கு கற்த்தரான நயி
17) னா முதலியார் கண்
18) ணால நமது தரகு
19) . . . .. அரசு ..

20) . . . .த்து கேட்டை . .

21) . . .லத்து

22) . . . . . .

23) ஈணப. . . .லே

24) முன் அரசு உரி

25) . . . .படியினாலே

26) .. . .டையது பாதிபரி. . .

27) . . .த்தம

28) .. . . .வேண். . . .

29) . . . .எண்ணுதக . .

30) . . . த்தின் .அரை. . .

31) . . . யிட்டு பாம்

32) . . . ப்பஞ்சு . . .

33) . . . .நாயத்து

34) . . . த்தகன் . . .

35) . . . பேசும்

36) . . . .

37) . . . அகுதம்

38) . . . கங்கைக் [ க ]

39) ரையில் க . . .

40) . . .கொண்ண பாவ

41) த்திலே போவாற்கள்

42) . . தந் தாயிக்கு தானே

43) . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1894 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண் 43 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி ராஜா | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

**இடம்:** ராஜா கோரி

**குறிப்புரை:** ராஜா கோரி என்று அழைக்கப்படும் இவ்விடத்தில் தஞ்சை மராட்டியர்களுடைய சமாதிகள் உள்ளன. அதிலும் குறிப்பாக சிவாஜி ராஜாவின் மனைவியர் சமாதிகள் கல்வெட்டோடு காணப்படுகின்றன. நடுவே பெரிய சமாதியும் அதைச் சுற்றிலும் சிறுசிறு சமாதிகள் பன்னிரண்டும் உள்ளன. இவற்றில் பெரிய சமாதியில் கல்வெட்டு ஏதுமில்லை. ஆயினும் அது சிவாஜி ராஜாவினுடையதாக இருக்கலாம். சுற்றிலும் உள்ள சமாதிகளுள் முதலாவதாக உள்ளது கீழ்க்காணும் கல்வெட்டு உள்ள சமாதி சிவாஜி ராஜாவின் மனைவி யெஸ்வத்தம்மா சிவலோக பதவி அடைந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1) விஜய ௵ பௌஷ மாஸ
2) சுக்கில பட்ச திர்தியை
3) க்கு சரியான 1894 ௵
4) ஜனவரி ௴ 10௳ புத
5) வார தினம் H.H ஸி
6) வாஜி மாஹறாஜா
7) சத்திரபதி அவர்க
8) ளின் பாரியை H.H.
9) M. யெஸ்வத்தம்பா
10) பாயி ஸாஹேபு அவர்
11) கள் சிவலோக பதவி
12) அடைந்தார்கள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1906 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண் 46 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி ராஜா | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: ராஜா கோரி

குறிப்புரை: சிவாஜி மகாராஜாவின் பத்தினி. மாதுஸ்ரீ கௌறம்பாபாயி சாயேப் இறந்து அவரை தகனம் செய்த இடத்தில் இவ்வாலயம் (சமாதி) கட்டப்பட்டது என்று கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு:

1) விசுவாவசு ௵ பால்குண மீ கிருஷ்ண பக்ஷம் ப்ரதிபதைக்கு சரியான 1906 ௵ மார்ச்சு மீ 11 ௳ றவி
2) வார தினம் ஹிஸ் ஹைனேஸ் சிவாஜி மஹாறாஜா சாயேப் அவர்கள் பத்னி ஹர்
3) ஹைனேஸ் மாதுஸ்ரீ கௌறம்பாபாயி சாயேப் அவர்கள் கைலாச வாசமடைந்
4) து தஹனமான இடத்தில். இந்த ஆலயம் கட்டப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1910 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண் 47 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி ராஜா | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

இடம்: ராஜா கோரி

குறிப்புரை: சிவாஜி மகாராஜாவின் பத்தினி இராமகுமாரம்ப பாயி தெய்வகதி அடைந்து அவருக்கு ஆலயம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு:

1) சாதாறாண ஞு ஆனி மீ 26 தி சுக்கில பக்ஷம் திருதியை சனிக்கிழமைக்கி சரியான 1910 ஞு ம்

2) சூலை மீ 9 தி ஹிஸ் ஹைநேஸ் சிவாஜி மகாறாஜா அவர்கள் பத்னியாகிய ஹர் ஹைநெஸ் மாதோ

3) ஸ்ரீ இராம குமறாம்பபாயி சாஹேபவர்கள் தெய்வ கதி அடைந்ததால் ஷை ஞு ஆவணி மீ

4) 7 தி திங்கள்க் கிழமை கிருஷ்ணபக்ஷம் திவிதியை தினம் ஆலயங் கட்டி கும்பா அபிஷேகம் செய்யப்பட்டது.

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண். 10/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1890 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண் 41 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி | ஊர்க் கல்வெட்டு எண். | 4 |

இடம்: ராஜா கோரி

குறிப்புரை: சிவாஜி மஹாராஜாவின் மனைவி அம்பாம்பாபாயி சிவலோக பதவி அடைந்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

**கல்வெட்டு:**

1) விக்ருதி ௵ மார்க[ஷீ]* ர்ஷம்° கிருஷ்ணபக்ஷம் சதுர்த்திக்கு சரியான 1890 இ-

2) டிசம்பர் ௴ 29 ௳ சோமவாரம் H.H.சிவாஜி மகாறாஜா சத்திரபதி அவர்களின்

3) பாரியை H.H. ஸ்ரீ அம்பாம்பாபாயி சாயப் அவர்கள் சிவலோக பதவி

அடைந்தார்கள்

த.நா.அ. தொல்லியல் துறை　　　　　　　　　தொடர் எண். 11/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | 1905 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண் 45 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி ராஜா | ஊர்க் கல்வெட்டு எண். | 5 |

**இடம்:** ராஜா கோரி

**குறிப்புரை:** சிவாஜி மஹாராஜா பத்தினியாகிய ஹர்ஹைனஸ் மாதோஸ்ரீ தீபம்பாபாயி புரட்டாசி மாதம் செவ்வாய்க்கிழமை தெய்வகதியடைந்து பின் இரண்டு மாதம் கழித்துக் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயம் (சமாதிக் கோயில்) கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1) விசாவசு (விசுவாசு) இ புரட்டாசி மீ கிருஷ்ணபக்ஷம் ஷஷ்டி செவ்வாய்க் கிழமை

2) ச ௳க்கு சரியான 1905 இ செப்டம்பர் மீ 19 ௳ ஹிஸ் ஹைனெஸ் சிவாஜி

3) மஹாறாஜா அவர்கள் பத்தினியாகிய ஹர் ஹைனெஸ் மாதோ ஸ்ரீ

4) தீபம்பாபாயி சாஹேப் அவர்கள் தெய்வகெதி யடைந்ததால் ஷ இ
கார்த்திகை மீ 18 ௳ ஞா

5) யிற்றுக்கிழமை சுக்கில பக்ஷம் சப்தமி தினம் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | 1921 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 1 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி ராஜா | ஊர்க் கல்வெட்டு எண். | 6 |

**இடம்:** ராஜா கோரி

**குறிப்புரை:** சிவாஜி ராஜா பத்தினி ஸ்ரீமதி சௌகாமாக்ஷி அம்மாபாயி ராணி அவர்களை தகனம் செய்த இடத்தில் இவ்வாலயம் (சமாதிக் கோயில்) கட்டப்பட்டது. இக்கல்வெட்டில் ஸ்ரீமந்த பிரின்ஸ் என்று சிவாஜி ராஜா குறிக்கப்படுகிறார்.

**கல்வெட்டு:**

1) துன்பதி இ கார்த்திகை மீ பவர்ணமி திதிக்கு சரியான 1921 இ நவம்பர் மீ 14 சோமவாரம் இராத்திரி

2) ஸ்ரீமந்த ப்ரின்ஸ் ஸிவாஜி ராஜா ஸாஹேப் க்ஷத்ரபதி அவர்களின் பத்தினி ஸ்ரீமதி சௌகாமாக்ஷி அம்மாபாயி

3) ராணி ஸாஹிப் அவர்கள் கைலாச வாசமடைந்து தகனமாக இடத்தில் இந்த ஆலயம் கட்டப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.19–20 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண் 42 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 7 |

இடம்: ராஜா கோரி

**குறிப்புரை : மாதுஸ்ரீ காமாக்ஷியம்பா பாயி அவர்களைத் தகனம் செய்த இடத்தில் ஆலயம் (சமாதிக் கோயில்) கட்டப்பட்டதைத் தெரிவிக்கிறது இக்கல்வெட்டு.**

**கல்வெட்டு:**

1) கர இ தை மீ 15 ௳ புதவாரம் றாத்திரி கைலாஸவாஸி

2) யான மாதுஸ்ரீ காமாக்ஷியம்பா பாயி ஸாஹேபவர்கள்

3) தஹனமானவிடத்தில் இந்த ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1895 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி மகாராஜா சத்ரபதி | ஊர்க் கல்வெட்டு எண். | 8 |

இடம்: ராஜா கோரி

குறிப்புரை: சிவாஜி மகாராஜாவின் மனைவி அனுசம்பா பாயி சிவலோக பதவி அடைந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) மன்மத ௵ அஸ்வினி மாஸ சுக்கில பட்சத் துவாதசிக்கு சரியான
2) 1895 ௵ செப்டெம்பர் ௴ 30 ௳ சோமவாறம் H.H. சிவாஜி மகாறாஜா சத்தி
3) ரபதி அவர்களின் பாரியை H.H.M. அனுஸம்பா பாயி ஸாகேப்
4) அவர்கள் சிவலோக பதவி அடைந்தார்கள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1899 |
| ஊர்: | தஞ்சாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | | ஊர்க் கல்வெட்டு எண். | 9 |

இடம்: ராஜா கோரி

குறிப்புரை: ஐறாதமா பாரிஹூ யோகனாத ஆவாரை சாயபு அவர்கள் கைலாசவாசியானதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது

கல்வெட்டு:

1) சுவத்திஸ்திரி சகாப்தம் 1821 விகாரி இ ஆனி மீ 28 புதன்கிழமை பஞ்சமி தி

2) [தி] 1899 சூலைமீ 12 ௳ ஐறாதமா பாரிஹூ யோகனாத ஆவாரை சாயபு

அவர்[க]ள் கைலாசவாசி

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண். 16/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13 – 14 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திட்டை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 149/1934 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக்கோயிற் சாசனங்கள் பாகம்II சாசன எண்.589 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் வெளிப்பிரகார மதிலின் மேற்குச்சுவர்

குறிப்புரை: தென்குடித் திட்டை உடையார் கோயில் திருவிழா, பூசைகளுக்காகக் கோயிற் தானத்தார் வசம் ஆனி மாதம் இருபத்தொன்றாம் தேதி முதல் அடைப்பான் நிலத்தில் ஐவேலி நிலம் முதலடங்க இறையிலியாக அளிக்கப்பட்டது. இரண்டு போகம் பயிர் செய்து கொள்ளவும், நீக்கப்பட்டுள்ள வரிகள் எவை எவை என்பது பற்றியும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் தென்குடித் திட்டை உடையார் தே[வ]னார்

2) . . .வெ. . . . கோயிற் தானத்தார்க்கும் பேரால் இன்னாயனார்க்கு அவனி வேந்த இராமன் சரு

3) க்கிருக்கும் சந்திக்கும் கண். . .நாட்டில் அடைப்பான் நிலத்திலே இருபத்தொ

4) ன்றாவது ஆனி மாதம் முதல் இவர்கள் வேணும் என்ற ஊர்களிலே ஐய்வேலி னி

5) லம் முதலடங்க இறையிலியாகத் தந்தோம் இன்னிலம் காரும் மறுவும் ஒரு பூவும்

6) ...... பயிர் செய்து கொண்டு நம் ஆட்டைப் பிறந்த நாள் ஆனி மாத

7)....... . . . .மாக எழுந்தருளப் பண். . .

8) த்து உத்திரட்டாதி தந்த நிலத்தால் வந்த நெற் கடமை காசு கடமை. . .

9) ணத் தந்தோம் இன்னி[ல]ம் மாவடை ஆயம் ஆனைச்சாலை குதிரைப்ப[ந்]தி ஆண்டெழு . . . .

10) டை புன்செய்க்கடமை[ம] வாசல் வினியோகம் ஓலையெழுத்து வினியோகம் ஆ[டிதரம்]அ

11) த்து வினியோகம் வரப்பச்சை வெட்டி காவேரிக்கரை ஆள்வரி ஏர்வரி இனவரி தறியி [றை]

12) தச்சத் தாழ்வு காத்திகை தட்டொலிப் பாட்டம் மற்றும் எப்பேர்ப்பட்ட அனைத்து உபந்த.. . .

3) றை தட்டார் பாட்டம் . . . .யம் வரியிலார் கணக்கிலும் கழிக்கச்

4) சொன்னோம் இப்படிக்கு..........வோலையே பிடி

5) பாடாகக் கொண்டு சத்திறாதித்த வரையுஞ் செல்லக் கல்லிலுஞ் செ

6) ம்பிலும் வெட்டிக் கொண்டு இத்திருச் சூலதானம் பண்ணி குடுத்துக் [கொ]

7) ள்ளவும் பாற்க. . .இவை நல்லான் எழுத்து இவை கொ. ..

8) எழுத்து.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 12–13ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திட்டை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் வெளிப்பிரகார மதிலின் மேற்குச் சுவர்

குறிப்புரை: கல்வெட்டின் இறுதிப் பகுதி மட்டும் உள்ளது. நல்லிசையான் உய்யவந்த பிள்ளை என்று கையெழுத்திட்டிருப்பது தெரிய வருகிறது.

கல்வெட்டு:

1) என்[ெ]* னழுத்து

2) . . .த்தை உடையான் நல்லிசையான்(ன்) எழுத்து இந்த

விலாககுடையான் திருச்சிற்ற[ம்ப]

3) ல இச்சாதனமே முதன்மைக்கு கழையிலுடையான் உய்யவந்த பிள்ளை எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 5 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி 13–14 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திட்டை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | குலசேகர தேவர் | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் வெளிப்பிரகார மதிலின் மேற்குச் சுவர்

குறிப்புரை: கல்வெட்டின் முற்பகுதி மட்டும் உள்ளது.

கல்வெட்டு:

1) கோமாற பன்ம[ரான] திரிபுவன சக்கர
2) வத்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு
3) அஞ்சாவது குடிப நாயற்று அப[ரபக்]க
4) த்து பஞ்சமியும் சனிக்கிழமையும்
5) . . .த்த நாள் நித்தவினோத வள. . .
6) . . .க் கூற்றத்து மாத்தூர் [அகர]
7) ..........

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 25 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.9,10–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | A.R.No. 65 of 1895 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I.Vol.V No.622 |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரி | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்

குறிப்புரை: தேவூர்நாட்டு மயிலையான்குடி மயிலையான் குடான்கொற்றன் திருவேதிக்குடி மாதேவர்க்கு நூற்றுநாற்பத்தைந்து நிறையுள்ள ஒரு பொருளை அளித்த செய்தி இக்கல்வெட்டில் காணப்படுகிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோஇராசகேசரி பன்மர்கு யாண்டு உயரு ஆவது

2) திருவேதிக்குடி மஹாதேவர்கு தேவூர் நாட்டு மயிலையான்

3) குடி மயிலையான் குடான்கொற்றனேன் குடுத்த பொ[ன்]. . .

4) + நிறை நூற்று நாற்ப்பத்தைந்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 223/1968 – 69 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டுகள் வானவன்மாதேவி, நக்கன் விக்கிரமகே[சரி] போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. விளக்கெரிப்பதற்கு அளித்த கொடையை ஏற்று மாஹேஸ்வரரே விளக்கெரித்த செய்தியை ஒரு துண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

அ

1) ஸ்வஸ்திஸ்ரீ திருவேதிகுடித். . . .
2) ழியாவச் செல்ல
3) [வ] ானவன் மாதேவியா . . .
4) . . . .நக்கன் விக்கிரம கெ . . .
5). . .யே பெற்றான்

ஆ)

1) . . . .ட்டல
2) . . . .
3) . . . .
4) . . . .
5) . . . .
6) களேய் செய்து
7) எங்களை யிவக
8) ளேய் செய்து எ
9) ரிப்பிப்பதாக
10) ஒட்டி. . . .
11) ண்டம் பன்மாஹே
12) ஸ்வர ர. . .
13) ரிப்பிப்பதாக
14) ஒட்டி இட்டுக்குடுத்
15) தோம் இவ்வூர் ஸ
16) பையோம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 3 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.9,–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | A.R.No. 66 of 1895 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I.Vol.V No.623 |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | பரகேசரி | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

**இடம்:** வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்

**குறிப்புரை:** பரகேசரிபுரத்துப் [மஹேந்தேவ வ்ருதக] பல்லவரசன் என்பான் இரவும் பகலும் ஒரு நொந்தாவிளக்கு எரிப்பதற்காக முப்பதின் கழஞ்சு பொன் கொடுத்ததைப் பரகேசரி நகரத்தார் பெற்றுக் கொண்டு மேற்படி விளக்கு எரித்தனர் என்ற செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

**கல்வெட்டு:**

1) ஸ்வஸ்திஸ்ரீ கோப[ர]* கேசரி

2) ப[ன்மற்]கு யாட்டு(*) மூன்(ற)றாவது கிழார்க்கூற்றத்துப் ப[ர]* கேசரிபு[ர]* த்து [மஹேஜேவ]

3) [வ்ருதக] பல்லவரசன் வச்ச நொந்தா விளக்கு இரவும் பகலும் எரிப்பதா[க]

4) வச்ச பொன் முப்பதிந் கழஞ்சு கொண்டு யிரவும் ப[க]* லு[ம்]* நொந்தா விளக்கு எரிப்

5) போமாநோம் பரகேசரி பு[ர]* த்து நகரத்தோம்

(*) 'யாண்டு' என்று வாசிக்கவும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 19 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.9 – ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | A.R.No.67 of 1895 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I.Vol.V No.624 |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரி | ஊர்க் கல்வெட்டு எண். | 4 |

**இடம்:** வேதபுரீஸ்வரர் கோயில் -கருவறை வடக்குச்சுவர்

**குறிப்புரை:** திருவேதிக்குடி மகாதேவர் கோயிலில் ஒரு நொந்தா விளக்கு இரவும் பகலும் எரிவதற்காகக் கிழார் கூற்றத்துக் கற்பகதானிபுரத்து இராசகேசரி ஈஸ்வர அகரத்துத் தேவனார் மகள் பதின் கழஞ்சு பொன்னை அளித்தாள். இதனால் வந்த வட்டி கொண்டு நிசதி உழக்கெண்ணையால் திருக்கோயிலுடையார்கள் விளக்கெரித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராசகேசரி பந்மற்கு யாண்டு பத்தொன்பதாவது ஆர்க்காட்

2) டுக் கூற்றத்துக் கிழ்பிரம்பில் தேவதானப் பிரமதேயம் திருவேதிக்குடி ம(ா)ஹா தேவர்க்கு

3) க் கிழார் கூற்றத்துக் கற்பகதானிபுரத்து இராசகேசரி ஈஸ்வரகரத்துத் தே[வ]னார் ம[கள்]

4) . . .ணி இரவும் பகலும் ஒரு நொந்தா விளக்கெரிவதற்குத் திருவேதிக்குடி ம(ா)ஹாதேவர்க்கு வைத்த. . .

5) கழஞ்சு இப்பொன் பதின் கழஞ்சுங் கொண்டு இதன் பலிசையால் நிசதி உழக்கெண்ணை[. . .]

6) கலும் ஒரு நொந்தா விளக்குச் சந்திராதித்தவல் எரிப்போமானோம் திருவேதிக்குடித் திரு[க்கோ]

7) முன்பு நின்று தேவர் பணி செய்தோமே இவ்விளக்கு எரிப்போமானோம் [திரு]

8) வேதிக்குடித் திருக்கோஇ [லு]* (ய) டையோம் இத்திருவிளக்குக்கு எங்களச்சினா பே[ாகத்]

9) தும் உடும்போடியாமை தவழ்ந்ததெல்லாம் ஒற்றியாக வைத்துக் குடுத்தோந் தி[ருக்கோயி]

10) லுடையோம் இதற்றிறம்பின் பன்மாஹே. . .த்துக் கழஞ்சுமே

11) . . .வேண்டுகோள் செய்தும் இவ் விளக்கெரிப்பிப்பதாக ஒட்டி இட்டுக் குடுத்தோம்

12) . . . த்திருக் கோஇலுடையோம் இவ்விளக்கெரிப்பித்தார் ஸ்ரீபாதமென் தலைமேலன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 10 – ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 5 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குப்பட்டி

குறிப்புரை: ஆரம்பமும் முடிவும் இல்லாத துண்டுக் கல்வெட்டு கொடுக்கப்பட்ட ஏதோ ஒரு தானத்தை மற்றொரு (மாற்றுக்) கற்றளியில் கல்லில் வெட்டுக என்று ஆணையிடப்பட்டது. கொடுக்கப்பட்ட தானம் நெல்லாக இருக்கலாம் என்பது பெறப்படுகிறது.

கல்வெட்டு:

1) . . .தேவனார் ஆற்காட்டுக் கூற்றத்துப் பெருஞ்சூருள்ளி. . .த்து. . .க்குச்
செய்தபடி மாற்றுக் கற்றளியில் கல்மேல் வெட்டுக என்றருளிச் செயப்
பரகேசரிபுரத்து நகரத்து மதுர நல்லூருடை. . .

2) . . .பந்திரண்டினு[க்கு] அரிசி நாற்பத்தெண்ணா. . .சேர பாக்கி இரட்டி நெல்லு
கலனே முக்குறுணி குறுகுலி. . .பதினொரு க்லனே நானாழி தயிரமுது நாழி
உரியும் திருப்பலிபிடிக்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc No U842
MADRAS

த.நா.அ. தொல்லியல் துறை　　　　　　　　தொடர் எண். 24/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10 - ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 6 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு குமுதம்

குறிப்புரை: நொந்தாவிளக்கு மற்றும் திருவிளக்கு எரிப்பதற்குக் கொடையாக நெல் கொடுக்கப்பட்ட செய்தியும், வழிபாட்டின் போது பாவாடை, வெற்றிலை, பாக்கு, சந்தனம் போன்றவற்றிற்குப் பொன் கொடையளித்த செய்தியும் இத்துண்டுக் கல்வெட்டுகளால் பெறப்படுகிறது.

கல்வெட்டு:

அ.

1) . .தெழு கலனே துணிப்பதக்கு நொன்தா விளக்கு. . .க்கு நிசதி எண்ணை
உழக்காக . . .பம் . . எளஉ ம். . .விளக்கு முப்பத்திரண்டினுக்கு எ. . ம் அந்த
விளக்கிட எண்ணை உரி உ ம் திருப்பல . . விளக்குப் பன்னிரண். . . .ழக்கும்
கூ. . . டு. . . மடத்து எரி உ ம் கைவிளக்கு இரண்டினுக்கெண்ணை உ[ரி]

2) யாக நெல்லு அறுநூற்று முப்பதின் கலமும். . . நெய் ஐஞ்ஞாழி ஆகச் சங்கி . .
விஷு. . .வினான்றும் படி இரட்டி அருளுநெய் . . . இருபத். . .யினால் நெய்
நாழியினுக்கு நெல்லுத்துணி ஆக நெல்லு முக்கலனேய் துணி உழக்காக
கார்த்தகை நான்று விளக்கிட எண்ணை ஐம்பதினாழியினால் எண்ணை நாழிக்கு
நெல்லுத்துணி..

3) . . .கு நெல்லு எழுகலனேய் துணிப்பதக்கு.... .... .. நாழி ஆக
ஓராட்டைய்க்கு நெல்லு முக்கலநே இருதுணிக் குறுணி.

ஆ)

1) ஸ்வஸ்தி ஸ்ரீ பொன் ப. . .முது செய்யும். . .பரிசட்ட ஓராட்டைக்குப் பொன்
கழஞ்சு உ ஈலு . . .க்கையும் கூ.ரைக்கால் பாவாடைப் புடவை ஓரணைக்குப்
பொன்ன(ன)ால். . .கூட்ட வெற்றிலைக்கும் வெறுங்காய்க்கும் பொன் கால்
சந்தணம் நிசதி அரைப்பலமாக ஓராட்டைக்குச் சந்தணம் நுற்றெண்பதி...

2) பொன் அரைக்கழஞ்சே இரண்டு மஞ்சாடி வி. . .பாவாடைக்கு ஈரணைக்குப்

பொன்னெட்டு நாழி உழக்கு மேற்க்கட்டிப் புடவை ஈரணைக்குப் பொன் எட்டு மஞ்சாடி நி. . .வை ஓரணைக்குப் பொன்னரைக்கால் நம் [ம]ாளிகைக்கு ஓராட்டைக்குப் புடவை ஈரணைக்குப் பொன் ஐங்கழஞ்சே எட்டு மஞ்சாடி உம் குன்றி – ஸ்வஸ்தி ஸ்ரீ

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண். 25/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 5 ஆவது |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1000 – |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 68/1895 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I Vol V No.625 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரி ஸ்ரீஇராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண். | 7 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு ஜகதி

குறிப்புரை: முதலாம் இராஜராஜ சோழனின் ஆணையின்படி, அவனது அதிகாரியாகிய மீனவன் விளத்தூர் நாட்டுக்கோன் என்பவன், இரவில் நடைபெறும் ஸ்ரீபலி நிகழ்ச்சியில் இறைவனை எழுந்தருளச் செய்யும் போது 30 விளக்கு எரிப்பதற்கு தேவையான எண்ணைக்கும், இவ்விளக்குகளை படிப்பவர் நால்வர், மலர் பறித்து பூமாலையாக்கித் தருவதற்கு இருவர், நந்தாவனத்தை பராமரிப்போர் மூவர், ஸ்ரீபலியின் போது வழிபாட்டிற்கு திருவமுது தயாரிப்பவன் ஒருவன் காளமூதுவோர் நால்வர் ஆகியோருக்கு மன்னன் அளித்த நிவந்தம் கொண்டு ஏற்பாடு செய்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேஸரி வர்மக்கு யாண்டு ரு ஆவது ஸ்ரீராஜராஜ தேவரருளிச் செய்ய [இத்தேவர்] கா

2) யூமாராய்கின்ற மீனவன் விள[த்தூ]ர் நாட்டுக் கோன் இதேவர் நிவந்தமேய் கொண்டு இரா ஸ்ரீபலி எழு

3) ந்தருளும் பொழுது எரியக் (கை)[கப்பி]டி விளக்கு முப்பதினுக்கு நிசதம் எண்ணெய் நாழி உழக்கு

4) இவை பிடிப்பார் மெழுக்கடிகள்மார் நால்வர் திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்பார் இருவர்

5) நந்தவானக் குடிகள் மூவர் சாலைக்கூடுவான் ஒருத்தன் காளமூதுவார் நால்வர் வநாஹேமஸ்ய ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண். 26/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 28 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 899 |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 282/1968 – 69 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | கோராசகேசரி பன்மர் | ஊர்க் கல்வெட்டு எண். | 8 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு ஜகதி

குறிப்புரை: பரகேசரிபுரத்துத் திருக்கற்றளி மகாதேவர்க்கு அதே ஊரைச் சேர்ந்த வியாபாரி வாள் எட்டும், சுடர் வாள் எட்டும் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோராசகேசரி பந்மர்க்கு யாண்டு உயஎ ஆவது பரகேசரி

2) புரத்து திருக்கற்றளி மஹாதேவர்க்கு இவ்வூர் வியாபாரி

3) குடு [த்]*த வாள் அ சுடர்வாள் அ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.9,10 –ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 279/1968 – 69 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண். | 9 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு ஜகதி

குறிப்புரை: பரகேசரிபுரத்து நகரத்தார் விளக்கெரிக்க பொன் கொடுத்த செய்தியும் இக்கோயிலுக்கு (இராஜகேசரிவர்மனின் தேவியார்) வானவன்மாதேவியார் பொற்பூ மற்றும் பரிகலன்கள் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு:

1) *ஸ்வஸ்திஸ்ரீ* கோ*ராஜகேஸரி* வ*ரு*ற்கு யாண்டு . . . . . . . . . . . . . .
பரகேசரிபுரத்துத் திருக்கற்றளி *மஹா*தேவ[ர்ப]ண்டாரம் நம். . . . . .றார்
வானவன் ௨ . . . . ஆராந்து சுருக்கோயில் கன்மேல் வெட்டுகவென்று பரகேசரி
புரத்து நகரத்தாரும் திருநம்

2) திராயதி முதலாயின பொன் கொண்டு செய்திருந்து ப[லம்]நிறை.. . .யநிபுர
னம்பி வெம்பன் விளக்[கெ]ரிக்க குடுத்த பொன் ௰ரு ம் இது [ந]ட்டகன் கூந்த
. . ழி விளக்கெண்ணை நிசதி ஆழாக்காக அட்டக் குடுத்த பொ[ன்] ஐங்கழ . . .
அ நீக்கி இருந்த பொன் ரு ம் . . [ச்ச மா]ணியார் குடுத்த பொற்பூ + நிறை
௧௰௭ நம்பிராட்டியார் வானவன் மாதேவி. . .

3) ருந்த பட்டம் + நிறை ஒன்பது மஞ்சாடி நம்பிராட்டியார் வானவன் மாதேவியார்
குடுத்த . . . . . . . . . . . . . . . எழுநூற்றிருபதின் [கழஞ்சு] இவரேய் குடுத்த
வெள்ளிக் . . . . ல்லாத்து . . நிறை தொண்ணுற்றுக் கழஞ்சு இவ[ரேய்] குடுத்த
வெள்ளி [வட்டம் நி]. . . . . தின் கழஞ்சு இவரேய் குடுத்த ச . .
பொன்னழுத்திச்சிது + நிறை எழுபத்திரு பலம் இவரே குடுத்த இ . . .

4) முப்பத்திரு பலம் பழையது செப்புச் சிறுத் தளிகை + நிறை இருபத்தொன்பதின்
பலம் இ . . . . செப்புக்கலையம் பானை + நிறை ஐம்பதின் பலம் . . .

கூடத்த செப்புக்கலசம் பெரியன ஒன்பதும் சிறியன நாலுமாகப் பதின்மூன்று நிறை இருநூற்றுத்தொண்ணூற்றெட்டு பலம் பழையன செப்பு வட்டிகை இரண்டு நிறை முப்பத்திரு பலம் செப்புச்சட்டுவம் + நிறை ஐம்பலம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 27 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 280/1968-69 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | கோவிராஜகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண். | 10 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்குப்புற ஜகதி

குறிப்புரை: இராஜகேசரிவர்மனின் தேவியார் வானவன் மஹாதேவி என்பவர் அட்டணிகைக் கால் என்ற பரிகலன் ஒன்றைத் தானமளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜ கேசரி பன்மகு யாண்டு இருபத்து உ௭ ஆவது நம் பிராட்டி
2) யார் வானவன் மாஹதேவியார் தந்த அட்டணிகைக் கால் +
3) நூற்று நாற்பத்து அறுபலம் அட்டணிகைக் கால் [+]

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண். 29/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 11 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்குப்புற ஜகதி

குறிப்புரை: பரிகலன்கள் தானமளித்த செய்தி மற்றும் அவற்றின் நிறையும் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ வழியும் பெரிய நிலை [உ]ண்ண மூன்று வழியும் சட்டி அஞ்சு நிறை இருநூற்று ஐம் [ப]* லத்து எழுபலம்

2) . . .வும் கறிக்கால் இரண்டு நிறை நூற்றொருபத்து முப்பலம் ச[ங்]கு மூக்கு ஒன்று இருபதின் பலம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 25 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.896 |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரிவர்மன் முதலாம் ஆதித்த சோழன் | ஊர்க் கல்வெட்டு எண். | 12 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் மேற்குப்புற ஜகதி

குறிப்புரை: இவ்வூர் நிலங்களுக்கு நீர்பாயும் பரகேசரி வாய்க்கால் அகலம், நீளம் பற்றிக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது.

கல்வெட்டு:

1) *ஸ்வஸ்திஸ்ரீ* கோ *ராஜகேஸரி* பந்மகு யாண்டு உயரு ஆவது கீழாற்க்கூ [ற்]* றத்து பரகேசரிபுரத்து திருக்கற்றளி தேவதானம் ஆற்காட்டுக் கூற்றத்து கீழ்பிரம்பில் பேர் அரைசூரம் நில[த்தி]

2) ல் ஒரு கோல் கலத்தால் தென் எல்லையின்னின்று வடவெல்லையளவும் நீர் பாய்யப் பெறுவதாகவும் இதன் கீழது பரகேசரி வாக்காலும் ஒருகோல் கலத்தாலேய் தெற்கு வடக்கு இத

3) ன் தெற்க்கில் வாய்க்கால் முக்கால் கோல் கலத்தால் கிழக்கிலெல்லை யளவும் செல்லப் பெறுவதாகவும் இதன் தெற்கில் வாய்க்கால் முக்காற் கோல் அகலத்தால் இ[ரு]

4) பதின் கோலா[க]க் குழி ஈ. . . [ச]திரத்து ஐஞ்ஞுற்று அறுபது குழியால் பத்துச் செ[ய்]யாவதாகவும் கீழவரம்பும் வடவரம்பும் அ. . .செய்யுடையாரின் வெ. . . .வேண்டும் . சீரன். . .

த.நா.அ. தொல்லியல் துறை | தொடர் எண். 31/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சை | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சை | வரலாற்று ஆண்டு: | கி.பி10–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | திருவேதிக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 13 |

இடம்: வேதபுரீஸ்வரர் கோயில் தெற்குப்புறக் குமுதத்தில் உள்ளது.

குறிப்புரை: இக்கோயிலுக்கு செப்புக்கடாரம், கருடத்தூக்கு விளக்கு தராத்தூக்கு விளக்கு ஆகியவை குடுத்த செய்தியும் அவற்றின் நிறைகளும் கூறப்பட்டுள்ளன. சிதைந்த கல்வெட்டு.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்ஸ்ரீ வேதிகணாந் வாயசிவஃ ப்ராசாஹ ஸங்க ஸ்ரீஃவதிவ ஸிஷ
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
2) . . . [ம]ன்றாடி நக்கனாதித்தனு நக்கன் மாதிரு குத்தனு நக்கன் திருவேதியு நக்கனாமா . . .
3) நூருடையான் இறைய்யண் மாயிலட்டியும் வானவன் பெரும்கேயநு . . . கணக்கன் . . . .செய்து வடுதாப் பட்டுடையார்
4) . . . .இக்கற்றளி முகட்டோடு இட்டந செய்து குடுத்த வெண் சாமரைக்கை உள்ளாலை இருப . . . .க்கம் உள்பட நிறை உ௱ந௰ந இது போற் செய
5) . . .[இட்டிக]நிறை முப்பத். . . .இவரேய் குடுத்த செப்புச் சாத்த எ. . ஒன்று . . . [கு]டுத்த செப்புக் கடாரம் ஒன்று இவ்வ. . .
6) கருடத் தூக்கு விளக்கு + நிறைய் பதினறு பலம் தராத் தூக்கு விளக்கு + எண்பது . . . .கறிக்கால் . . .முப்பதிந் பலம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி 19-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | பருத்திக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | மகாராஜா சாகேப் | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: திரௌபதி அம்மன் கோயில் எதிரிலுள்ள தனிக்கல்

குறிப்புரை: மகாராஜா சாயபு அவர்கள் திருவையாறு பஞ்சநதீசுரசாமிக்குக் கால சந்தியில் அமிர்து செய்வதற்காகப் பருத்திக்குடியில் நிலம் கொடுத்த செய்தி தெரிகிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்ரீ [சேவை]
2) துஙூபி தையி மீ
3) ரு ௳ மகாராச ச
4) ாயபு அவர்கள் பஞ்சநதி
5) சுரசாமிக்கு கால சந்தி அ
6) பிஷே[க அ]மிர்துக்கு
7) அ௰ரு ங் கட்டளை
8) யில் வ[டக்கு] பருத்தி கு
9) டிநி . . . . ட்டநிவஞ
10) இசுர . . .
11) கோவில் . . பி . .
12) கருப்பூர்நி . . . . ஙீட௨ இ
13) ஞ படியே தற்மம் இதுக்கு
14) விகாதம் பணினவன்
15) கெங்க கரயிலே கா
16) ராம் பசுவை கொ
17) ன்ற தோழத்தில்
18) [போவா]ன்

த.நா.அ. தொல்லியல் துறை　　　　　　　　தொடர் எண். 33/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | சக 1758<br>கி.பி. 1836 |
| ஊர்: | பள்ளி அக்ரஉறாரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | க.எண்.68 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜி ராஜா சத்ரபதி சாஉேறப் | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: வெண்ணாற்றங்கரை மேம்பாலம்.

குறிப்புரை: வெண்ணாற்றங்கரையிலுள்ள இக்கல்வெட்டு லெப்டினென்ட் கர்னல் மக்கிளீன் தஞ்சையில் தங்கியிருந்த போது சிவாஜி ராஜச் சத்ரபதி சாயப் அவர்கள் இப்பாலத்தைக் கட்டுவித்தார்கள் என்று கூறுகிறது. இப்பழமையான பாலம் தற்போதும் நல்ல நிலையில் உள்ளது.

<u>கல்வெட்டு:</u>

1) வீரசிம்ம வரத்தில் சோழ தேசத்தின் சிம்மா
2) சனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற க்ஷத்திரிய பூ
3) பாலராகிய இஸ் அயினேஸ் ஸ்ரீ மந்ரா ஜ ஸ்ரீசிவா
4) ஜி இராஜச் சத்ர பதி சாயபவர்களிந்தப் பா
5) லத்தை ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஉறன தளளருயஅ துன்
6) முகி வருஷத்தில் லெப்டினான்று கறனல் மக்கிளீன்
7) இரெசிடென்றாயிருக்கயில் கட்டி வைத்தார்கள்

* இக்கல்வெட்டில் ர என்ற எழுத்தைப் புதுமையான முறையில் ா என்று எழுதி இருப்பது நோக்கத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.19–ம் நூற். |
| ஊர்: | பள்ளி அக்ரஹாரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | |
| மொழி: | மராட்டி | முன் பதிப்பு: | |
| எழுத்து: | நாகரி | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | சிவாஜிராஜா சத்ரபதி சாயப் | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: வெண்ணாற்றங்கரை மேம்பாலம்

குறிப்புரை: வெண்ணாற்றங்கரையிலுள்ள இக்கல்வெட்டு மராட்டிய மொழி, நாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதே செய்தி ஆங்கிலத்திலும், தமிழிலும் கல்வெட்டாக உள்ளது குறிப்பிடத்தக்கது. லெப்டினெண்ட் கர்னல் மக்ளீன் தஞ்சையில் தங்கி இருந்த போது சிவாஜி ராஜச் சத்ரபதி சாயப் அவர்கள் இப்பாலத்தைக் கட்டுவித்தார்கள் என்று கூறுகிறது. இப்பழமையான பாலம் தற்போதும் நல்ல நிலையில் உள்ளது.

<u>கல்வெட்டு:</u>

1. वीरसिंहवर लंधघोलदेश सिंहासना धिष्ट
2. तक्षत्रि(य) भुपाल हिस हैनस क्षीमत राज
3. क्षीशिवाजी महाराज छत्रपति सहेब याति
4. हासाकुखस्ति क्षीशलि वाहन शकंटण दर्मुखि
5. शवसरिलफटन कर्नल मकलीनर
6. सीडेटयाचे वले सबा धवीला ।

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1836 |
| ஊர்: | பள்ளி அக்ரஉறாரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | ஆங்கிலம் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | ஆங்கிலம் | | |
| அரசு: | தஞ்சை மராட்டியர் | | |
| அரசன்: | ராஜஸ்ரீ சிவாஜி மகாராஜா சத்ரபதி சாஉறப் | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

இடம்: வெண்ணாற்றங்கரை மேம்பாலம்

குறிப்புரை: லெப்டினன்ட் கர்னல் மக்ளீன் தஞ்சையில் தங்கி இருந்தபோது சிவாஜி மகாராஜா சத்ரபதி சாஉறப் அவர்கள் இப்பாலத்தைக் கட்டுவித்தார்கள் என்று கூறுகிறது.

<u>கல்வெட்டு:</u>

1. Erected by H.Highness
2. STREE MUNT RAJASREE SEEWAJEE MAHARAJAH CHATRAPDY SAHIB
3. RAJAH OF TANJORE
4. AD 1836
5. Lie'L.. Col .. MACLE[E]N being RESIDENT.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை     தொடர் எண். 36/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 12 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13 – 14ம் நூற்றாண்டு |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 632 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம் : வல்லத்துக் கோட்டைக்குள் சோழீசுரன் கோயில்

குறிப்புரை : பாண்டிக் குலபதி வளநாட்டு ஏரியூர் வல்லத்து உடையார் கரிகால சோளீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு இவ்வூரவர் முன்சாமங்கள் பூசைக்கும் திருப்பணிக்குமாக நெற்பொதிக்கும், உப்புப்பொதிக்கும், நெற்கோட்டை ஒன்றுக்கும், ஆயம் ஆக வந்த காசினை விழுக்காட்டுப்படி பெற்று ஆதிசண்டேசுவர தேவகன்மியிடமும் ஸ்ரீருத்ரமாகேசுவரக் கண்காணி செய்வார்களிடமும் அளித்த செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கோ சடைய பன்ம[ர]ான திரிபுவன சக்கர(ா)வத்திகள்
பரதா பாண்டிய[1] தேவராண்டு பன்னிரண்டாவது மார்கழி மாதத்து
அ–தி நாள் பாண்டி குலபதி வளநாட்டு ஏரியூர் வல்லத்துடையார்கரிகால
சோளீஸ்வர முடைய நாயனார் கோயில் நாட்டு கரு[வு]குலஆதிசண்டேஸ்வர
தேவகன்மிகளுக்கு(ங்)ம் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேஸ்வரகண்காணி செய்வார்களுக்கும்
இவ்வூரநூவரோம்[2] இந்நாயனாற்குமுன் சாமங்கள் பூசைக்கும் திருப்பணிக்குங்
கல்வெட்டிக் குடுத்து கல்வெட்டின படிக்கு கொள்ள நிச்சயித்த நெற்பொதி ஒன்றுக்கு
இரண்டாகவந்த காசும் உப்புப்பொதி ஒன்றுக்கு நாலாக வந்த காசும் கோட்டை
ஒன்றுக்கு ஒன்றாக வந்த காசு கொள்ளவும் மாறு ஆயம் மவையிற்றுக்கு
இவ்விழுக்காட்டு படியே கொள்ளவும் பண்ணுவதுஇப்படிக்கு இவை கங்கத்தரையன்
எழுத்து இப்படிக்கு இவை இராசபுரந்தகப் பல்லவரையனெழுத்து இப்படிக்கு இவை
தியாகவினோதபல்லவரையன் எழுத்து இப்படிக்கு இவை அதிகமான் எழுத்து
இப்படிக்கு இவை நித்தவினோத பல்லவரையன் எழுத்து இப்படிக்கு இவை
இலுப்பையூருடையானா[ன] குழஞ்சபி[ள்]ளையான செழியகோன் எழுத்து இப்படிக்கு
இவை செயதுங்கப் பல்லவரையன் எழுத்து இவை பணியாலூர்க் கணக்கு

வல்லமுடையான் திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து இவை பணியாலூர்க் கணக்கு கௌரி ஆள்வான் எழுத்து

1.அரசன் பெயர் சுந்தரபாண்டியதேவர் என்று இருத்தல் வேண்டும்

2 இவ்வூரவரோம் என்று வாசிக்க

பி.கு. தற்போது இக்கோயிலில் அனைத்துக் கல்வெட்டுகளும் சிதைந்து விட்டன. அல்லது சிதைக்கப்பட்டு விட்டன. வரலாற்று முக்கியத்துவம் கருதிப் பின்வரும் பதினொரு கல்வெட்டுகளும் தென்னிந்தியக் கோயிற்சாசனங்கள் பாகம் 2–லிருந்து எடுத்தெழுதப்பட்டுள்ளன. இவை மெக்கன்சி காலத்தில் பண்டைய எழுத்து பற்றிய பயிற்சி இல்லாதவர்களால் எழுதச் செய்யப்பெற்று நூலாக வெளியிடப்பெற்றதால் கல்வெட்டு வாசகங்கள் பிழையாக இருக்கலாம். ஆனாலும் வரலாற்றை அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வினை ஊட்டிய மெக்கன்சியின் பணி பாராட்டிற்குரியது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 18 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 13-ம் நூற். |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 633 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | போசளமன்னன் வீரராமநாதன் | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: வல்லத்துக் கோட்டைக்குள் சோழீசுரர் கோயில்

குறிப்புரை: ஹொய்சள அரசன் வீரராமனாநாதனுடைய பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. இதில் வல்லத்துடையார் கரிகால சோளீஸ்வரநாயனார் கோயில் குறிக்கப்படுகிறது. கல்வெட்டு முழுமையும் இல்லை.

கல்வெட்டு:

1) இம்மண்டான ஒலை [1] வல்லத்துடையார் கரிகால சோளீஸ்வரமுடைய நாயனார் கோவில்த் தானத்தா[ர்](க்) கண்டு ஸ்ரீராமந[ா]த தேவற்கு பதினெட்டாவது மாசி மாஸத்து இருபத்து மூன்றாயன் தியதி முதல் . . . . . [2]

1. "கோநேரின்மை கொண்டான் ஒலை" என்றிருத்தல் வேண்டும்
2. சாசனம் பூர்த்தியாகவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 25 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13–14–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 634 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | வீரபாண்டிய தேவர் | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

இடம்: வல்லத்துக் கோட்டைக்குள் சோழீஸ்வரசாமி கோயில்

குறிப்புரை: கரிகால சோளீசுவரமுடையார் கோயிலுக்கு இறையிலியாக நிலம் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ திருபுவந சக்கரவர்[த்]*தி ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு உயரு வது தை மாத [.. ..]ஸ்வபரமுடையார் கரிகால சோளீசுவரமுடைய நயினார் கோயில் சைவாசாரியருடைய ஆலிலுத் தெவன பலவன நாயக பட்டற்கு . . . வல்லத்து ஊரவரோம் . . . யிறையிலியாக யஜஷாத்து . . .யாணாமபணது

விளைநிலத்துப் புன் செய்யுமாவன இவ்வூர் குடிக்காடுகளில் குமணன் காட்டில் புஞ்சை நிலம் தடம் கூத்தக்குடி விளை நிலத்தில் தடி இரண்டு னாலக்குக் குழி ளஅயா ஊரார் தந்தவரை முதலடங்க இரையிலியாக கல்வெட்டிக் குடுத்தோம் இப்படிக்கு கங்கதரையன் எழுத்து இவை பரகலுடையாதெலென்னார் எழுத்து இவை இராச புரந்தரப் பல்லவரையன் எழுத்து இவை நித்த வினோதப் பல்லவரையன் எழுத்து இவை தியாகவினோதப் பல்லவரையன் எழுத்து இவை அதிகமான் எழுத்து இவை அகளங்கப் பல்லவரையர் எழுத்து இவை வீரவினோதப் பல்லவரையர் எழுத்து எதிரிலிசோழப் பல்லவரையர் எழுத்து இவை சோழவிச்சாதரப் பல்லவரையர் எழுத்து இவை மாங்குடையான் இரா[ச]*ரா[ச]* பல்லவரையர் எழுத்து இவை பாசைக்கழையான் திருவையாறுடையார் எழுத்து இவை தேவகுலமுடையான் பெரிய உடையானெழுத்து இப்படிக்கு இவை ஊரவர்ப்

2. பாகால ஊர்க் கணக்கு வல்லமுடையான் பெரியனாயன் எழுத்து . . . புதுவலி வனநாயக பட்டற்கு இவ்வூர் குடிக்காடு கூத்தக்குடிக் காவலில் விளைநிலத்தில் கீழ்வெட்டியில் செம்பூண்டி ஊர்வா காட்டுருடையார்கள், பூர்வங்க இறையிலியாக சந்திராதித்தவரையும் உதக பூர்வம்மாகக் குடுத்திருக்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 5 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1016 |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 635 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | கோனேரின்மைகொண்டான் | ஊர்க் கல்வெட்டு எண். | 4 |

இடம்: கோட்டைக்குள் சோழீஸ்வரசாமி கோயில்

குறிப்புரை: அரசனுடைய நேரடி ஆணையாக இக்கல்வெட்டு அமைந்துள்ளது. பாண்டிக்குலாசனி வளநாட்டு வல்லத்துடையார் கரிகால சோளீசுவரமுடையார் கோயில் சீகாமகோட்டமுடைய நாச்சியார்க்கு வேண்டும் நிமந்தத்துக்கு இறுப்பதாக தேவதான இறையிலி நிலம் அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ *தி*புவன சக்கரவத்தி கோனேரிமை கொண்டான் பாண்டிகுலாசனி
வளநாட்டு ஏரியூர் நாட்டு வல்லத்துடையார் கரிகால சோளீ*ஶ்வ*ரமுடையார்
கோயில் தேவகன்மிக்கு ஸ்ரீமாஹே*ஶ்வ*வரக் கங்காணி செய்வர்களுக்கும்
ஸ்ரீகாரியஞ் செய்வானுக்கு யாத்தமாக தேவதான இறையிலி இட நாம் நீர்
வா[ர்]*த்த நிலத்துக்கு உடலாக இத்தேவற்கும் இக்கோயில் சீ காமக்
கோட்டமுடைய னாச்சியார்க்கும் வேண்டும் நிமத்தத்துக்கு இறுப்பதாக
நித்தவினோத ௵ .. .. க்குக் [1] கிழ

1. நித்தவிநோத வளநாட்டு என்று இருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 8 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | – |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 636 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | ஹொய்சளர் | | |
| அரசன்: | போசள வீரராமநாதன் | ஊர்க் கல்வெட்டு எண். | 5 |

**இடம்:** வல்லத்துக் கோட்டைக்குள் சோழீசுரர் கோயில்

**குறிப்புரை : பாண்டிகுலாசனி வளநாட்டு ஏரியூர் நாட்டு கரு[வு]குல வல்லத்துடையார் கரிகால** சோளீசுவரமுடைய நாயனார் கோயிலில் திருப்பணிக்கும் பூசைக்கும் உடலாக இவ்வூர் எல்லைக்குள் பெறும் சாரிகைக் காசு கொண்டு மேற்படி பணியினைச் செய்ய ஊரார் அளித்த தானத்தை இக்கல்வெட்டு குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1) ஸ்வஸ்திஸ்ரீ *ஸாவபௌம*வன சக்கரவத்திகள் ஸ்ரீபோசள வீரஇராமநா*ழ* தேவர்க்கு யாண்டு எட்டாவது பாண்டிகுலாசநி வளநாட்டு ஏரியூர் நாட்டு கரு[வு]குல வல்லத்துடையார் கரிகால சோளீஸ்வரமுடைய நாயனார் கோயில் ஆதி *சண்டேஸ்வ*ர தேவர்கன்மிகளுக்கு இவ்வூர் உடையாரோம் இன்னாயனார்க்கு எங்களூர் எல்லை நம் பிராட்டியார் பேர்வழிக்கு மேற்கும் குறுங்குளத்து எல்லைக்கும் தோரண புளிக்கும் ஊர்க்கும் நந்தன கரைக்கு கிழக்கும் உய்யக்கொண்டான் ஆற்றுக்குத் தெற்கும் முன்பிலாண்டுகளும் அகப்படையாக நாங்கள் கொண்டு போதுகிற இது தேவர் சாரிகை ஆக கொள்ளவும் கொள்ளுமிடத்து இந்த எல்லைக்குள்ளு போவன வருவன அடைப்பன முகப்பன நிறுப்பன மடிவைப்பன உடைப்பன நாங்கள் கொள்ளுங் காசு கொண்டு பூசைக்கும் திருப்பவாயணிக்கும் உடலாக்க் கொள்வது இப்படிக்கு ஊராக(கு) சமைந்த மைக்கலா பணியால் ஊர்க்கணக்கு வல்லமுடையார் எழுத்து இப்படிக்கு இடையான் அரையன் அஞ்சலவூனான கங்கதரயன் எழுத்து இப்படிக்கு இவை இலுப்பையூருடையான் அரையன் திரும[ழ](ம)பாடி உடையான் இராசபுரந்தரப் பல்லவரையனெழுத்து இப்படிக்கு இவை காமங்கலமுடையான் எழுத்து வீரவினோதப் பல்லவரையனெழுத்து இப்படிக்கு இவை காமங்கலமுடையான் எழுத்து வீரவினோதப் பல்லவரையன் சயஞ்ஞாதனமைக்கு இவை ஆதமங்கலமுடைய நாயக உடையான் எழுத்து.

இன்னிலம் இத்தேவர்கன்மிகள் கைக்கொண்டு பயிராற்றி இத்தேவர்களுக்கு வேண்டும் நிவந்தங்கள் செலுத்தக் கடவார்களாகப் பண்ணுக. இவை காலிங்கராயன் எழுத்தென்று இட்டு யாண்டு ஒன்பதாவது நாள் முன்னூற்றெண்பத்து நாலி நால் வூர்ராஞ்ஞு [1] செய்தருளின திருமுகப்படி . . . உ . . .வரிப்படி . .
பாண்டிகுலாசனி வளநாட்டு ஏரியூர் நாட்டு வல்லத்துடையார் கரிகாலசோளீஸ்வர முடையாற்கு வேண்டு நிமித்தங்களுக்கு இறுப்பதாக மருதிகுடி வண்டாழையான தியாகசமுத்திர நல்லூரென்னும் பேரால் யாண்டு ஒன்பதாவது முதல் அந்தராயம் பாட்டம் உள்படத் தேவதானம் இறையிலியாக இட்ட இவ்வூரைச் சூழ்ந்த வெட்டிக் காட்டில்(ம்) மருதிகுடி வண்டாழையென்று பேர் கூவப்பட்ட நிலத்து நீர் நிலமாகத் திருத்த . . . [2]

1. வூலாடஞ் என்று வாசிக்க

2. சாசனம் இத்துடன் நின்றுவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.12–ம் நூற். |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 637 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | கோனேரின்மை கொண்டான் | ஊர்க் கல்வெட்டு எண். | 6 |

இடம்: வல்லத்துக் கோட்டைக்குள் சோழீசுரர் கோயில்

குறிப்புரை: அரசனுடைய நேரடி ஆணையாக உள்ளது இக்கல்வெட்டு. பாண்டிகுலாசனி வளநாட்டு ஏரியூர் நாட்டு வல்லத்து உடையார் கரிகால சோளீசுவரமுடையார்க்கும், வல்லத்து விக்கிரமசோழ விண்ணகராழ்வார்க்கும் வேண்டும் நிமந்தங்களுக்கும் இறுப்பதற்காக பருதிக்குடி வண்டாழைநிலத்து நீர் நிலத்தையும் புன்செய் நிலத்தையும் திருத்தித் தியாகசமுத்திர நல்லூர் என்றும், கூத்துக்குடி நிலத்தில் நீர் நிலம் புன்செய் நிலத்தையும் திருத்தி விக்கிரமசோழநல்லூர் என்னும் பெயரால் அந்தராயம் பாட்டம் உட்பட இறையிலியாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் வல்லத்துப்

படைமுதலிகளுக்கு பாண்டிகுலாசனி வளனாட்டு ஏரியூர் நாட்டு வல்லத்து உடையார்

கரிகால சோளீஸ்வரமுடையாற்கு வேண்டு நிமந்தங்களுக்கு இறுப்பதாக அவ்வூர்

சூழ்ந்த வெட்டிக்காட்டில் மருதிகுடி வண்டாழை நிலத்து நீர்நிலமாகத் திருத்தலாம்

நிலம் ஒரு பதிற்று வேலியும் புன்பயிர் செய்யலாம் நிலம் ௲ய–திற்று வேலியும் ஆக

நிலம் னாப்பதிற்று வேலியும் தியாக சமுத்திரநல்லூரென்னு பேராலும் வல்லத்து

விக்கிரமசோழ விண்ணகராழ்வாற்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக அவ்வூர்

சூழ்ந்த வெட்டிக்காட்டில் கூத்தக்குடி நிலத்தில் நீர் நிலமாக திருத்தலா[ம்]*நிலம்

பதிற்று வேலியும் புன்பயிர் செய்யலாம் நிலம் பதிற்று வேலியும் ஆக நிலம் இருபதிற்று

வேலியும் விக்கிரமசோழ நல்லூரென்னும் பேராலும் வேறுபிரித்து இத்தேவர்களுக்கு

ஒன்பதாவது முதல் அந்தராயம் பாட்டம் உள்படத் தேவதான இறையிலியாக இட்டு

இப்படிக்குநம் வரியிலும் எழுத்தி . . ன் வரிப்படிக்கு காட்டச் சொன்னோம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 12 + 1 = 13 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13–14ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 638 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | முதல் இராஜேந்திரன் | ஊர்க்கல்வெட்டு எண். | 7 |

இடம்: வல்லத்துக் கோட்டைக்குள் சோழீசுரர் கோயில்

குறிப்புரை: சுந்தரபாண்டிய தேவர் திருமுகப்படி குலசேகர தேவரின் 13–ஆம் ஆட்சியாண்டில் விக்கிரமசோழ விண்ணகரும் கரிகால சோளீஸ்வரர் அரிகுலசேகரி ஈசுவரமுடையார் கோயில் கரிகால சோழ மாகாளிகோயில் ஆகியவற்றுக்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு குடிநீங்காத் தேவதானமாக நிலம் அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல்படி . . . பாண்டிகுல[. . .]வளநாட்டு எரியூர் நாட்டுக்

கருவுகுல வல்லத்துடையார் கரிகால சோளீஸ்வரமுடையாரும் உடையாரும் அரிகுல

கேஸரிஸ்வரமுடையார் கோயில் தானத்தாருக்கு . . . விண்ணகர எம்பெருமான் . . .

சயவானும் படாரி கரிகால சோழ மாகாளி கோயில்ப் பா[ர]*சிவனும் இன்னாயன்

மார்க்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு அடைத்த இந்நாட்டுக்

காமபியங்கமெல்லை+ மாங்குடி யெல்லைக்கு மேற்கும் தென்னெல்லை குன்றத்தூர்

மலைக்கு வடக்கும் மேலெல்லை முள். . . லூக்குக் கிழக்கும் வடவெல்லைக் குட்பட்ட

நிர்நிலமுங் கருஞ்செய் . .க்குளப் பாரிப்புமுள்ளிட்ட பழந்தேவதானமும் பள்ளிச்சந்தமு

நிக்கி நீக்கிஉள்ள நிலத்தில் விக்கிரமசோழ விண்ணகர எம்பெருமானுக்கு நாலில்

ஒன்று நீக்கி நிக்கிஉள்ள நிலத்தில் உடையார் அரிகுலகேஸரிஸ்வமுடைய நாயனார்க்கு

ஒரு வேலி கறை இறைஇலியாகவும் பிடாரிம் மாகாளிக்கு ஒரு வேலி கறைய . . .

விளாகமாகவும் உள்ள நிலம் உடையார் கரிகால சோளீஸ்வரமுடையார் குடி நீங்காத

தேவதானம் . . . ற்ற பேரில் நிலம் . . . பாவதாகவும் .. இப்படியால் வந்த கட்டம் அந்தராயம் விநியோகம் காரிய ஆராட்சி வெட்டிபாட்டமும் பஞ்சுவிலி சத்துவிக்ரமம் மற்றும் எப்பெயர்ப்பட்டதுவும் உளப்பட்டப் பன்னிரண்டாவதின் எதிராமாண்டு முதல் இன்னாயன்மார்க்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்குத் தந்தோம் சந்திராதித்த பகலுஞ் செல்வதாகத் தந்தோம் நம் ஓலையை பிடிபாடாகக் கொண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக்கொள்வதே இவை . . . உடையான் எழுத்து. இவை சேதராய னெழுத்து. ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர் திருமுகப்படி இது பெருமாள் குலசேகரதேவர்க்கு பன்னிரண்டாவதின் எதிராமாண்டு முதல் —11

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13–14–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 640 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | (குலசேகரதேவர்) | ஊர்க் கல்வெட்டு எண். | 8 |

இடம்: வல்லத்துக் கோட்டைக்குள் சோழீசுரர் கோயில்

குறிப்புரை: பாண்டிகுலபதி வளநாட்டு ஏரியூர் நாட்டு கருவுகுல வல்லத்து உடையார் குலசேகரமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளிடம் வல்லம் ஊரார், இக்கோயிலுக்கு ஆடித்திருநாள் நடத்துவதற்கும் அப்போது யாகமண்டலத்தில் இறைவனை எழுந்தருளச் செய்தல், திருக்கோட்டுத் திருநாள் முதல் நாச்சியார் திருநாள் வரை இறைவனுக்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் தாங்களே ஊராரிடமிருந்து பெற்று மேற்குறிப்பிட்ட அனைத்துத் திருநாள்களையும் நடத்துவதாகவும், இதைத் தடைபடாமல் நடத்துவதாகவும் இசைவு தெரிவித்து எழுதித் தந்த செய்தியைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் இறுதியில் ஊரார் அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர்.

<u>கல்வெட்டு:</u>

1) . . . தேவற்கு யாண்டு ஔ[1]ஆடி மாதத்து ஒரு . . .பாண்டி குலபதி வளநாட்டு ஏரியூர் நாட்டுக் கருவுகுல வல்லத்துடையார் குலசேகரமுடைய நயினார்கோவில் ஆதிசண்டேசுர தேவர்கன்மிகளுக்கு இவ்வூரரோம் இசைவு தீட்டுக் குடுத்த பரிசாவது இ(வ்வ)[ந்நா]யனாரை இவ்வாண்டு முதல் ஆடித் திருநாள் எழுத்தருவிக்க இன்னாயனார்க்குத் தந்தது புறவம் இல்லாதபடியால் நாங்கள் இத்திருநாள் எழுந்தருளுகிக்கவும் யாக மண்டபத்தில் திருமடைப்பள்ளித் திருமண்டபந் திருமதிளிலெ மேயவும் திருக்கொட்டுத் திருநாள் முதல் நாச்சியார் திருநாள் வரையாக அமுது படி சாத்துப்படித் திருச்செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமம் திருவிளக்கெண்ணையாக மண்டபமுள்ளிட்ட மெ . . . வும் பஞ்ச திரவியம் வேண்டுவனல் அழிவுகளும் ஊரிலே இரந்து ஊரார்கள் எழுந்தருளிவிக்கக் கடவோமாகவும் இப்படிக்கு ஆண்டுதொறும் சந்திராதித்த வரையு முட்டாமல் எழுந்தருளிவிக்கக் கடவோமாகவும் இப்பிடிபாடு கல்லிலும் வெட்டிக் கொள்ளக் கடவார்களாகவும் இப்படி சம்மதித்து இறைவுதி இப்பரமாண்டிலக்[2] குடுத்தது . . . வகன்மிகளுக்கு வல்லத்து ஊரவரெல்லாம் இந்தப்படிக்கு இவை நெடுவாயில் உடையான் கங்கதரைய னெழுத்து இப்படிக்கு இவை இலுப்பையூர் உடையான் இராசபுரந்தர பல்லவரையன் எழுத்து இப்படிக்குக் கீரமங்கல உடையான் தியாகவினோதப் பல்லவரையன் எழுத்து. இப்படிக்கு

அரசூருடையான் கூத்தாடுவான் அவைய[ம்+] புக்கான் எழுத்து இப்படிக்கு நெடுவயல் உடையான் அதியமான் தற்குறியாண்மைகளுக்கு வெள்ளறை உடையான் பிச்சன் எழுத்து இப்படிக்கு வல்லமுடையான் உடையாண்டான் எழுத்து இப்படி திரமூர் உடையார் அரையன் சேந்தன் வயிரவணக்கோன் எழுத்து இப்படிக்கு மங்கலமுடையார் குலோத்துங்க பல்லவரையன் எழுத்து இவை நெடுவாமுடையான் வீரவினோதப் பல்லவரையன் எழுத்து இப்படிக்குடையான் திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து இப்படி அரும்பாக்கமுடையான் தற்குறியாண்மைக்கு இலுப்பை உடையான் பெரியுடையான் இப்படிக்கு நெடுவாயல் உடையான் ஆவூர் நாட்டு கருகான் எழுத்து இப்படிக்கு எரியூர் நாட்டு தொள்ளான் எழுத்து இப்படிக்கு கண்டியுடையான் மதுராந்தக வேளான் எழுத்து இப்படிக்கு மாங்குடையான் இரா[ச]*ரா[ச]* பல்லவரையன் எழுத்து இப்படிக்கு இலுப்பையுடையான் குயவேளான் எழுத்து இப்படிக்கு உடையார் அகளங்கப் பல்லவராயன் எழுத்து. இந்த பிரமாணமைகள் வல்லமுடையான் கணக்கு [ கோளிலி எழுத்து]

1. கல்லிலே ஆண்டின் எண் உரு என்பதோடு வது சேர்த்து ஒரே உருவாக எழுதப்படுவது உண்டு. அவ்விதம் ள்ளதையே இம்மாதிரி பெயர்த்து எழுதியிருத்தல் வேண்டும்.

2. இசைவு திட்டுப் பிரமாணம் என்று வாசிக்க.

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண். 44/1979

மாவட்டம்: தஞ்சாவூர்

வட்டம்: தஞ்சாவூர்

ஊர்: வல்லம்

மொழி: தமிழ்

எழுத்து: தமிழ், கிரந்தம்

அரசு: பாண்டியர்

அரசன்: சுந்தர பாண்டியன்

ஆட்சியாண்டு: 18

வரலாற்று ஆண்டு: கி.பி.14–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: —

முன் பதிப்பு: தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 641

ஊர்க் கல்வெட்டு எண். 9

இடம்:

குறிப்புரை: வல்லத்து உடையார்கோயிலில் சோழமாதேவி உடையான் கோனேரியாள்வானும் ஊராரும் திருநாவுக்கரசு தேவர்க்குத் திருநாள் எழுந்தருளுவிக்கச் செய்தது பற்றிக் குறிப்பிடுகிறது. திருக்காரொளித் திருநாள், இரண்டாம் திருநாள், மூன்றாம் திருநாள் ஆகிய திருவிழாக்களும் குறிப்பிடப்படுகின்றன. கல்வெட்டின் பிற்பகுதி கிடைக்கவில்லை.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கோசடைபன்ம திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஸுந்தரபாண்டிய தேவற்கு

யாண்டு பதினெட்டாவது கும்[ப]*ஞ நாயற்று உரு . . . வ . . பக்ஷத்து வெளனையும்

ஷியாக கிழமையும் பெற்று மகத்து(1) நாள் பாண்டி குலபதி வளநாட்டு ஏரியூர் நாட்டு

கருவுகல வல்லத்து உடையார் கரிகால சோளீஸ்வரமுடைய நாயனார் திருமாசித்

தலமுடை . . . சிவமுஷ ராஜ ெ . . . (2) திருநாள் அ . . . ப்பான திக்க

கொமத்திருநாளும் வளநாட்டுக் கணக்குச் சோழமாதேவ உடையான் கோனரியாள்

வான் திருநாவுகரசு தேவர்க்கு திருநாள் எழுந்தருளிவிக்கும் கோயில் மங்கலத்து

ஊரவரும் நகரமழகிய சோழபுரத்து ஊரவரும் . . . திருக்காரொளித் திருநாள்

எழுந்தருளிவிக்கும் நாட்டாயத்துக்கு கடல் கொன்னான்டாரான கத்தரையன்

இண்டாந் திருநாள் எழுந்தருளிவிக்கும் இந்நாயனார் திருநாமத்து முதலடங்க

இறையிலியான காமபயமான சுந்தரபாண்டிய நல்லூர் ஊரவர் மூன்றாந் திருநாள்

எழுந்தருளிவிக்கும் . . .

1. ஸுவப வக்ஷத்து வெளணையும் வியாழக்கிழமையும் பெற்ற மகத்து நாள் என்று வாசிக்க

2. ஸ்ரீ ஈஷ ஸ்ரீராஜேஸ்வர என்று இருத்தல் வேண்டும்

3. சாசனம் மேலே கிடைக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 5 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 643 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜேந்திர சோழன் | ஊர்க் கல்வெட்டு எண். | 10 |

இடம்: (இரண்டாவது வல்லத்தில் சோழீசுரர் கோவிலுக்கு மேல் பாரிசத்திலிருக்கிற தெய்வநாயகப் பெருமாள் கோவில் நிலையிலெழுதப்பட்ட கல்சாதனத்தைப் பார்த்தெடுத்தெழுதினது)

குறிப்புரை: கருவுகுல வல்லத்து தெய்வநாயகப் பெருமாளுக்கு இவ்வூர் வாணிய நகரத்தார் நிச்சயித்தபடி திருநந்தாவிளக்கு எரியச் செய்தது பற்றிக் குறிப்பிடுகிறது.

<u>கல்வெட்டு:</u>

1) . . . திகள் *ரா*ஜேந்ரசோழ தேவர்க்கு யாண்டு ரு வது கருவுகுல வல்லத்து

ஸ்ரீதெய்வநாயகப் பெருமாளுக்கு இவ்வூர் வாணிய நகரத்தோ[ம்]* நிச்சயித்தபடி இந்நாயனாற்கு திருநந்தா விளக்கெரிய நாங்கள் நிச்சயித்து இந்நாயனார் திருவாசலில் திருநிலை காலில் கல்லில் கல்வெட்டிக்கு இந்தப்படி தெய்வநாயகன் நாழிக்கொத்த கன்மி காவளன் ஆரூர் காலே நான்நாழி எண்ணை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 8 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | – |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 642 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | போசளர் | | |
| அரசன்: | வீர ராமநாதன் | ஊர்க் கல்வெட்டு எண். | 11 |

இடம்:

குறிப்புரை: கரிகால சோழீசுவரமுடையார் கோயிலுக்கு வல்லத்து வாணியரில் ஆலாலசுந்தர நம்பி, வழங்கிய ஐடையினைக் குறிப்பிடுகிறது. இவர் பலரிடமிருந்து பெற்ற 10 பொன்னுக்கு நாள் ஒன்றுக்கு செம்பால் அளிக்கும் எண்ணை உரி, மற்றும் செக்கு நிலக்கூலிக்கு எண்ணை உழக்கும் ஆக மூன்று உழக்கு நெல் அளிக்க வேண்டும். அவ்வாறு அவன் அளிக்காவிட்டால் மற்ற மூவர் இவனுக்குப் பதில் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்ஸ்ரீ ஸாவ꞉ ஹௌச சக்கூவத்திகள் ஸ்ரீஹோஜள வீரர[ா]மனாத தேவற்கு

யாண்டு அ வது எட்டாவது நாள் [ . . . ] பாண்டிகுலபதி வளநாட்டு எரியூர் நாட்டு கருவுகுல வல்லத்துடையார் கரிகால சோழீசுவரமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேஶ்ர தேவகன்மிகளுக்கு இவ்வூரில் வாணியரில் ஆலால சுந்தரநம்பியும் . .

. . லருமகு சேர் . .ஏகக்கட்டின தேவர் பொன் பத்து பலபேரால் பற்றின காசினால் பொன் பத்துக்கும் நாள் ஒன்றுக்கு செம்பால் அளக்கும் எண்ணை உரியும் செக்கு நிலக் கூலிக்கு எண்ணை உழக்கும் ஆக எண்ணை மூவுழக்கும் சந்திராதித்தவரை ஒருவனிருக்கிலும் அளக்கக்கடவோம் அல்லால் சுந்தரநம்பியுஞ் சண்டேசுர நம்பியும் திருச்சிற்றம்பல நம்பியும். . .

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண். 47/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.11, 12ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | — | | |
| அரசன்: | — | ஊர்க் கல்வெட்டு எண். | 12 |

இடம்: நரசிங்கப் பெருமாள் கோயில் கருவறையின் தெற்கு

குறிப்புரை: சிறு துண்டுக் கல்வெட்டு. எழுத்துக்களும் தெளிவாக இல்லை

கல்வெட்டு:

1. . . . . . நாட்டு கிளி . . . காம்பியங் கிழையாந் அழகிய மண
2. . . . ரைக்குடையார் உய்ய வந்தவாளந் .செ . . ரயக்கல் .. . செபுதாந்
3. . . .வாய்க்கல் செய்தாந்

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண். 48/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.14,15 –ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | சமஸ்க்ருதம் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | கிரந்தம் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 13 |

இடம்: நரசிங்கப் பெருமாள் கோயில் முன்மண்டபம்

குறிப்புரை: கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளது

கல்வெட்டு:

I

1. ஷ்வஸ்ஶ்ரீ . . ஸ . .ஸெ. . ஃத . . ரஸ . . ஹமே .
வ வி . . ஜயஸ்ஃஹ ஶ்ரீஸ்ஃஈ ராஃதெவஃ

II

1. . . த் . . வ . . காவரஊ பாரஷ. . ஜதொ.. ஜஹ. . ஹரா. . ஜா
ஃா நரஹொகெஶ கஸ்ராதெவ ஷெ

2. ஸ. . தொஃ. .. ஸி . . ஷே . . ஹவரொயவ. . தக்ஷிணொகாஜெகவெ
கஹஸொஃவாஃதஃ. . .

3. தொதத நிதவினொஹா . . ஃணூா ஹத்ர ஸஶி ஸெவஃஂஹஸஃயாஃதெ
உரிதிஸ்ஃதஃ . .உவாஜி ஹத

த.நா.அ. தொல்லியல் துறை | தொடர் எண். 49/1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10-11ம் நூற். |
| ஊர்: | வல்லம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | ARE 1928 No.131 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 2 எண் 632 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 14 |

இடம்: பெருமாள்கோயில் கிழக்குப்புற மண்டபத்து கற்சாளரம்

குறிப்புரை: அகளங்கப் பெருந்தெருவிலிருக்கும் வாணிய நகரத்தார்கள் (செக்காடும் வாணிகர்) கொடுத்த கல்வெட்டு. திருவெள்ளறையுடையான் ஆ[ழ்]வான் பிள்ளை என்பான் வைத்த திருவிளக்கொன்றுக்கு வேண்டும் காசு தந்தார் அதனைப்பெற்று வாணிகர்களும் திருவிளக்கெண்ணெயினைச் செக்கில் உலவிக், கோயிலில் விளக்கிற்கு எண்ணெய் விடுப்பார் பக்கல் அளந்து வரச் சம்மதித்து அளித்த கல்வெட்டு இது.

கல்வெட்டு:

1. தெருவில் வாணி
2. யர் நகரத்தோம்
3. கல்வெட்டிக் கு
4. டுத்தபடி இந்நாயனாற்குத் திரு
5. வள்ளறையுடையான் ஆ[ழ்]வான் பிள்
6. ளை வைக்கிற தி
7. ருவிளக்கு க க்கு
8. வேண்டுங் காசு எங்களுக்குத் தந்து
9. நாங்களும் ஊர் விநியோகத்துக்கு உட
10. லாகக் கைக் கொ
11. ரண்டு முன்பு
12. நாங்கள் திரு
13. விளக்கெண்ணை அளக்கிற தன்மதாவள . .
14. ன் ஆழூர்க் கொள்ளயிலேஏற்றி நாள் ஒன்று
15. க்கு அளப்பிடி. .னாழ
16. ளண்ணை எங்களில்

17. முன்னின்றாரும் செக்கிலும் உலாவி எண்ணை
18. விடுப்பார் பக்கலிலு அளப்பித்துக் கொள்ள
19. க் கடவர்களாகவு
20. ம் இப்படி ஸம்ம
21. தித்துக் கல்வெட்டிக் குடுத்தோம் இக் கோ
22. யிலுக்கு அகளங்கப் பெருந்தெருவில்
23. வாணிய நகரத்தே
24. த[ா]ம்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண். 1/1981

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 5 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1016 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 50/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1413 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதல் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவர் மற்றும் பட்டி.

குறிப்புரை: இராஜேந்திர சோழனின் நாலாவது ஆட்சியாண்டு வரை தஞ்சாவூர்ப் புறம்படிக் கருவிட்டகுடி மகாதேவர்க்குப் பலரும் அளித்த பொற்பூக்கள், கண்மணி, நெரிஞ்சிப்பூ போன்றவை நிறை ஒன்பது பொன். இராஜேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் இப்பொன் ஒன்பதும் மாற்றப்பட்டு, மன்னனால் இருபது கழஞ்சு பொன் கொண்டு பட்டம் ஒன்று செய்தளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி
2) வளர இருநில மடந்தையு
3) ம் பொற்செயப் பாவயு
4) ம் சீர்தனிச் செல்வியு
5) ங்ன் பெருந் தேவியராகி
6) இன்புற நெடுந்தியல்
7) ஊழியுள் இடைதுறை
8) நாடும் துடர்வன வேலி
9) ப்படர் வனவாசியும்
10) சுள்ளி சூழ் மதிள் கொ
11) ள்ளிப் பாக்கையும் ந
12) ண்ணற்கரு முரண் மண்
13) ணைக் [கடக்]கமும் மாபெரு
14) ஙண்டால் கொண்ட கோ
15) ப்பரகேசரி பநரான ஸ்ரீ
16) ராஜேந்த்ர சோழ தேவர்

17) க்கு யாண்டு ரு ஆவது த

18) ஞ்சாவூர்ப் புறம்படிக் க

19) ருவிட்டகுடி[1] ஊ[ா]* தே

20) வர்க்கு யாண்டு நான்

21) காவது வரை பல வ

22) கையாலும் இட்டார்

23) இட்ட பொன்னால் ப

24) ட்டங்களும் பொற்பூ

25) க்களும் கண்மணிக

26) ளும் நெரிஞ்சிப்பூக்

27) களும் பிடிலிகை வா

28) ரியால் கூடினபொ

29) ன்னும் ஆகப் பல வ

30) கையாலு[ம்]* கூடி பொன்

31) ஒன்பது மாறி குடிமை

32) பட்டம் ஒன்று

33) .. ளுக் கல்லில் நின்ற பொன் இருபதின் கழஞ்சே அரைக் காலினால் இராஜேஶ்ர சோழன்

1. கருந்திட்டகுடி என்று இருத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 2 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 49/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1412 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | பரகேசரிவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை: கருந்திட்டைக்குடி மகாதேவர் கோயில் சிவப்பிராமணர்களான கௌசியன் கணபதி தூற்றியனும், பக்குடி சுதந்தியும், தஞ்சாவூர் வீரசோழப் பெருந்தெருவில் திருதரன் சோமபிரான் கோயில் உடைய ஆத்திரையன் சீதரன் தாழியான இராமீஸ்வரமுடையானுக்குக் கருந்திட்டைக்குடி மகாதேவர் கோயில் முப்பது வட்டத்து /நாள் இருபதும், பிடாரி கோயில் நாள் இருபதும், நந்திமாகாளி கோயில் நாள் இருபதும் ஆக இக்கோயிற் காணியாட்சியை விற்றுக் கொடுத்த செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ
2) கோப்பரகேசரி
3) பநூற்க்கு யாண்டு
4) உ ஆவது புறம்படி
5) கருந்திட்டை குடி மா
6) தேவர் கோயில் [உடை]
7) டய கௌசிய[ந்]* க[ண]
8) ப[தி] சூற்[றிய]னு
9) ம் பக்குடி சுதஙி[1]
10) யும் இவி[ருே]வாம் இ
11) த[ஞ்]சாவூர் வீரசோழ
12) [ப்பெருந்]்தெ]ருவில் திருத
13) ரன் சோமபிராந் கோ
14) யில் காணி உடைய
15) ஆத்திரையந் சீதர

16) ன் த்ராழியாந [இ]ரா

17) மீஸ்ஸுர முடை

18) யா(ந்)]நுக்கு இக் கருந்திட்டைகுடி மாதேவர் கோயி

19) லில் விற்று குடுத்த நாள் முப்பது வட்ட

20) த்து இருபதும் இவூர் பிடாரி கோயில் நாள்

21) இருபதும் நஙி மாகாளி கோயில் நாள் இருபதும்

22) இ[வ]நுபவிக்க நாங்கள் மூவ[ரொடந்]படி..

1. திருநஙி என இத்துறையால் படிக்கப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 7(அ)8 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1171 (அ) 72 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்கு ஜகதி.

குறிப்புரை: பாண்டிகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நகரத்தார் கருந்திட்டைக்குடியான சுங்கந்தவிர்த்த சோழ நல்லூரில் தங்கள் காணி நிலங்களைத் தலை, இடை எனத் தரம் பிரித்து அளந்து அனுபவிக்காமல், பின்னர், இராஜாதிராஜன் காலத்தில் முக்கோக்கிழானடிகளின் ஆணைப்படி அந்நிலங்களை ஒக்கக் கூறிட்டுக் கல்லிலும் வெட்டிக் கொண்டு அனுபவித்த செய்தியினை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கடல்சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் கலைமாதரும்
2) அடல் சூழ்ந்த பார்மாதரும் சீர்மாதரும் அமர்ந்து வாழ நாற்கடல் சூழ்
3) புவியெழும் பாற்கடல் பொற்புகழ் பரப்ப ஆதியுகமாயென் சே
4) சாதி முடி புனைந்தருளி அறுசமயமு மைம் பூத
5) மும் நெறி நின்று பாலிப்ப தெந்நவருஞ் சொலருஞ் சிங்
6) களரு முதலாய மன்னவர்கள் திறை சுமந்து வந்தீண்டிச் சே
7) சவிப்ப ஊழியூழியொரு செங்கோலெழு பா
8) ரு மினிதளிப்பச் செம்பொன் வீரஸிம்ஹா[சன]
9) த்து உலகுடை முக்கோக்கிழானடிகளொடும் வீற்[றிரு]
10) ந்தருளிய கோவிராஜகேஸரி பந்மரான த்ரிபுவ[னசக்கர]
11) வத்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டு [எ]
12) ..து பாண்டி குலாசனி வளனாட்டு தஞ்சாவூர் கூற்றத்து
13) தஞ்சாவூர் நகரத்தோம் ஐம்பது கரையிற் காணி உடைய குடிமக்கள் எல்லோமும் எங்க[ளி]ல் இசைந்து ஸம்ம
14) தித்தபடி[1] எங்கள் காணி கருந்திட்டை குடியான சுங்கந் தவித்த சோழநல்லூர் முன்பிலாண்டுகள் தலை நிலக் கடை நிலம் ஒக்கக் கூறிட்டு

15) அநுபவியாமையில் ஏழாவது தலைநிலக் கடைநிலம் ஒக்க கூறிட்டு கரை எடுத்தபடியே சந்திராதித்தவற் செல்வதாக திருவானை உலகுடை முக்கோக்கிழாநடிகளா

16) ணை இட்டு இப்படி கல்லில் வெட்டிக் கொண்டோம் இந்நகரத்தோம்

1. ஸமக்கத்தபடி என்று கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 24 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1009 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 48/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1411 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதல் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண். | 4 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் மேற்குப்புறச் சுவர்

குறிப்புரை: இராஜராஜன் படைவீரரில், குதிரைச் சேவகரில் அரங்கன் காரியான சோழ விச்சாதிர முத்தரையனும், இளையபடை இருமடி சோழ வீரரில் காரிகுளிர் வாகையும் ஸ்ரீஇராஜராஜதேவர் காண அவர் முன்னிலையில் வில்லால் சண்டையிட்டபோது காரிகுளிர் வாகை இறந்து பட்டமையில், காரிநக்கத்தின் மகன் கண்டன் காரியும், காரி கொற்றத்தின் மகள் பொற்காரியும் இவள் கொழுந்தன் குட்டி பொன்னாடையும் இக்கோயிலில் இறைவனுக்கு விளக்கு எரித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்த வில் பொருது சண்டையிட்ட நிகழ்ச்சி வீரர்கள் தங்கள் திறம் காட்டுவதற்காகவும் மன்னர் கண்டு களிப்பதற்காகவும் நிகழ்த்தப்பட்டிருக்கலாம்.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநி
2) லச் செல்வியுஙனக்கே உரிமை
3) பூண்டமை மனக்கொளக்
4) காஙளூர் சாலை கலமறுத்தருளி[வே]
5) ங்கை நாடுங் கங்கபாடியுஙடி[கைபா]
6) டியு ஙுளம்பபாடியுஙடி[கை பாடியு]
7) ங் குடகமலை நாடுங் கொல்ல
8) முங் கலிங்கமும் எண்டிசை பு
9) கழ் தர ஈழ மண்டலமும் இர
10) ட்டபாடி ஏழரை இலக்கமுஙின்
11) டிறல் வென்றித் தண்டால் கொண்ட தன்னெ
12) ழில் வளரூழியுள் எல்லா யாண்டும் தொழுதகை
13) விளங்கும் யாண்டே செழிஞரை தே(ச்)சு கொள் கோவி

14) ராஜராஜகேசரி பந்ரான ஸ்ரீராஜராஜ ஷேவர்க்கு யாண்டு

15) உயச ஆவது ஸ்ரீராஜராஜ ஷேவர் சிறுதனத்து சிங்

16) களாதைக தெரிஞ்ச குதிரைச் சேவகரில் அரங்கன் காரி

17) யான சோழ விச்சாதிர முத்தரையனோ[டு] இளைய பை

18) ட இருமடி சோழ வீரரில் காரிகுளிர்வ[ாகை] ஸ்ரீராஜரா

19) ஜ ஷேவர் காண வில்லெக்கத் தொ[ள]ம் எய்து

20) காரி குளிர்வாகை பட்டமையில் இவனுக்குறவு மு

21) றை கடவரான காரி நக்கத்தின் ம[க]ன் கண்டன்

22) காரியும் காரிகொற்றத்தின் ம

23) கள் பொற்காரியு

24) ம் இவள் கொமுதை

25) ன் குட்டி பொன்னாை

26) [ட]யும் உள்ளி

27) ட்டாரொடும் திருணி

28) இ[ந்த] ஸ்ரீகோயில்

29) ர்ஹாஷேவற்க்கு வை

30) த்த நொதை விளக்கு

31) சதாதிதவற் எரிக்க க

31) டவாரித்தளியில் ஸ்ரீகோ

32) யிலுடையார்கள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 25 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1010 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதல் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண். | 5 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் கருவறை மேற்குக் குமுதம்

குறிப்புரை: தஞ்சாவூர்ப் புறம்படி கருந்திட்டைக்குடி மகாதேவர் கோயிலில் இராஜராஜன் தன் 25-ஆவது ஆட்சியாண்டில் எழுந்தருளுவித்த ஆடவல்லார் நம்பிராட்டியார் மகாபரமேஸ்வரிக்கு சந்தி விளக்கெரிப்பதற்காக வளவன் சூற்றி பன்னிரெண்டு காசு அளித்தான். அதனைப் பெற்றுக் கொண்ட கவிசியன் கணவதி சூற்றியான அஞ்ஞூற்றுவ பட்டன் உள்ளிட்ட ஸ்ரீகோயிலுடையார்கள் விளக்கெரித்த செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுஙனக்கேய் உரிமை பூண்டமை மனக்கொளக் காஙளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்பாடியும் தடிகை பா[டி]யும் குடமலை நாடும்

2. கொல்லமும் கலிங்கமும் எண்டிசை [புக]ழ்தர ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரையிலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டால் கொண்ட தன்னெழில் வளர் ஊழியுள் எல்லா யாண்டிலும் தொழுதகை

3. விளங்கும் யாண்டே செழியரை [தே]சு கொள் ஸ்ரீகோவி ராஜராஜகேசரி பந்ரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு [உரு]ஆவது உடையார் ராஜராஜதேவர் பெருந்தரத்து ராஜராஜத்

4. தஞ்சாவூர் புறம்படி கருஙிட்டைகுடி *மஹா*தேவர் கோயிலில் தானெழுஙருளுவிச்ச ஆடவல்லார் நம்பிராட்டியார் *மஹா*பரமேஸ்வரிக்கு சஙராதித்தவற் நின்றெரிய *சஙி* விளக்குக்கு

5. விலை ... லு உழபடுவான் வளவன் சூற்றி

6) இத்தேவர் அதிகாரிகள் ஸ்ரீசண்டேஸ்வ......

7) சு அறுநூறு இக்காசு முன்னின்று இது ஒளி ......

8) ரர் வசம் வ்ளவன் சூற்றி கொடுத்த காசு பன்னிரண்டு இத்தளி ஸ்ரீகோயிலுடையூமை' ஸ்ரீராஜராஜ தேவர் தண்டமாகத் திருவாய் மொழிந்த்ரு

9) ள் சுபபோக போசர்க்கும் சண்க்குமாக முன்பு நின்று ஆபத்துப்பட்டு காசி நின்று மாதேவர்க்கு ஸ்ரீகொயிலில் திருப்பணி முட்டாமைச் செய்யா நின்றும் சந்திவிளக்கு நாலும்

10) சஙராதித்தவற் முட்டாமை முன்னின்ற ஸ்ரீகோயிலுடையோமே எரிப்பதாக இக்காசு பன்னிரண்டுங் கொண்டே(ண்)ன் கவிசியன் கணவதி சூற்றியான அஞ்ஞூ

11) ற்றுவ பட்டனேன் உள்ளிட்ட ஸ்ரீகோயிலுடையோம் கவிசியன் கணவதி சூற்றியான திருக்கோயிலுடை[யோம்] *

* ஸ்ரீகோயிலுடையோமை – என்றிருத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 17 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1002 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 46/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1409 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதல் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண். | 6 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் தென்புறக் கருவறைச் சுவர்

குறிப்புரை: முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் பிராமண ஊர்களில் பிரமதேயம் மற்றும் பிற ஜாதிகளைச் சார்ந்தவர்களில் காணியாகப் பெற்றிருந்த நிலம் ஆகியவற்றைத் தவிரப் பிறரின் நிலங்களைக் கட்டாயமாக விற்றுத் தரும்படி மன்னன் ஆணையிட சாத்தம்பி என்ற அரிகாரி எண்பத்து ஒன்றரையே மூன்று மா அரைக்காணி நிலத்தை கையகப்படுத்தி பிரமதேயம் மூலமாக மன்னன் இராஜராஜ சோழனின் சகோதரி ஸ்ரீகுந்தவைப்பிராட்டியார்க்கு விலைக்கு விற்ற செய்தியும் அவர் அந்நிலங்களைக் கோயிலுக்கு நொந்தா விளக்கெரிப்பதற்குக் கொடையளித்த செய்தியும் காணப்படுகிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ
2) திருமகள் போலப் பெருநி
3) [ல]ச் செல்வியும் தனக்கே உ
4) ரிமை பூண்டமை மனக்கெ[ா]
5) ளக் காந்தளூர் சாலை கலம
6) றுத்தருளி வேங்கை நாடும்
7) கங்கபாடியும் நுளம்பபாடியு[ம்]
8) தடிகை பாடியும் குடமலை நாடுங் கெ[ா]
9) ல்லமும் கலிங்கமும் எண்டிசை [புகழ்]
10) தர ஈழ மண்டலமும் திண்டிறல் வென்[றி]
11) தண்டாற் கொண்டு தன்னெழில் வள[ரு]
12) மூழியுள் ளெல்லா யாண்டுந் தொழுதக [வி]
13) ளங்கும் யாண்டே செழியரை தேசு கொ
14) ள் ஸ்ரீகோவி ராஜராஜ ராஜகேஸரி பந்மக்கி

15) யாண்டு யஎ ஆவது நித்த விநோத வள

16) நாட்டு நல்லூர் நாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீர[ா]

17) ஜகேஸரி சதுவேதி மங்கலத்து ஸபையோம் விற்[று]

18) நிலவிலை யாவணம் நம்மையுடைய சக்ரவத்தி ப்ராஹ்மண ஊ[ர்]

19) களில் ப்ராஹ்மணர்க்கு கீழ்ப்பட்ட ஜாதிகளில் காணிகளில் பணி

20) செய் மக்கள் பணி செய் காணியொழிய நின்றார் காணி வி[ற்க]ெ

21) வன்றருளிச் செய்ய புக்க கேழ்விப்படி அதிகாரிகள் வானவன் மூ

22) [வ]ந்த வேளார் அடைவு குத்துவித்து வரிசைவிட்ட படி விற்றுக் காசு த

23) ண்டுக வென்றருளிச் செய்து உடையார் பணிமகன் சாத்தம்பியாரை

24) ஏவ இச்சாத்தம்பியார் தண்ட ஸபையோம் விற்ற நிலவிலைய[ா]

25) வணம் நம்மையுடைய சக்ரவத்தி ஸ்ரீ பராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீகு

26) [ந்]தைப் பிராட்டியார் இந் நித்தவிநோத வளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்

27) து தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் வடகரை கருந்திட்டைகுடி தேவர்க்கு திருநெ[ா]

28) ந்தா விளக்கு வைப்பதற்க்காக இ ஸ்ரீபராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவை

29) பிராட்டியார்க்கு ஸபையோம் விற்றுக் குடுத்த நிலம்மாவது இவ்விரா

30) ஜ கேசரிச் சதுவெதி

31) மங்கலத்து நரதொங்க வ

32) திக்கு மேற்கு ஏழாங் கண்ணா

33) ற்று இராஜகேஸரி வாய்க்காலு

34) க்கு தெற்கு ரு ஆம் சதிரத்து வட

35) கடைய ரு மூன்று மாவும் நரதொங்க

36) வதிக்கு மெற்கு ச ஆங் கண்ணாற்று ரா[ஜ]

37) கேஸரி வாய்க்காலுக்கு தெற்கு உ ஆம் ச

38) திரத்து தெற்கடைந்த ரு காலி

39) ல் தெற்கடைந்த உய ச ஒரு மாவு

40) [ம்] யு உ ஆக ூச நான்மாவல

41) ரய்யும் விற்று விலையாவண[ம்]

42) செய்து குடுத்தோம் ஸ்ரீபராந்த[க]

43) தேவர் திருமகளார் ஸ்ரீகுந்தவை பி

44) [ர]ாட்டியார்க்கு ஸ்ரீராஜகேஸரிச்சது

45) வெதி மங்கலத்து உஹாவஸை

46) யோஉ இந்நிலன் நான்மாவை[ர]

47) [ெ]சயும் விற்று விலையாவணம் செய்து

48) குடுத்துக் கொண்ட விலைப்பொருள் [காசு] ஈழக்காசு

49) வாசி படாமைச் செல்லுங் காசு எ[ம்]மில்லை

50) சந்த விலைப் பொருட்காசு அய஌ [இவ்]

51) வெண்பத்தொன்றரையேய் மூன்று மா அரைக்[காணி]

52) கீழ்ப்பட்ட ஜாதிகளிலார் காணி விலைக் காசு..

53) ர்ப்பித்து இந்நிலத்துக்கு இதுவேய் [விலை]யாவணமும் இதுவேய்

54) பொருமாவறு[தி]*ப் பொரு[ட்செலவ]ோலையும் இதுவேய் ஆவதாகவும் இது

55) [வ]ல்லது வேறு பொருட்மாவறுதிப் பொருட்செலவோலை காட்டக்
கடவாரல்லா

56) தாராக இப்பரிசு ஒட்டி விலைக்கற விற்று பொருள[றக் ெ]காண்டு
[விற்று] விலையாவணம் ெ

57) சய்து குடுத்தோம் நம்மையுடைய வகூவத்திகள் ஸ்ரீபராந்தக தேவர்
திருமகளார் ஸ்ரீகுந்த

58) வைப் பிராட்டியார்கு ஸ்ரீராஜகேஸரி சதுவேதி மங்கலத்து
உஹாவஸையோம் பணியா

59) ல் இவ்வூர் ஸ்ரீவெங்கடவன் ஆயர் கொழுந்தினென் இவை யென்னெழுத்து இ

60) [ப்]படி அறிவேன் இவ்[வூர்] வைகானஸன் காஶ்யபன் ஸ்ரீவாஸுதேவன்
ஆராவமுதினேன் இப்படி

61) பணியால் உயூஷ[ந்] வேங்கடவன் அரங்கனேன் இவை எந்நெழுத்து இப்படி
பணியால் ..

62) [உ]யூஷன் வில்லிற் கிடந்தா(ன்)னான மங்கலாச்சனேன். இ[வை எ]ந்நெழுத்து
இப்படி அறிவென்

63) வைவாந.. .. .. கௌதமன் கொவிந்தன் சிங்கபிரானேநெழுத்து இப்படி பணி

64) [யாலஉயூ]ஷன் அரங்கம் பூதியான மங்கலோத்தமனென் [எழு]த்து இப்படி பணி

65) இவ்வூர் வேட்கோவன் புறம்பியன் எச்சில் மண்டையென் எழுத்து இப்படி
பணியால்

66) ஸ்வஸ்தி அரங்கம் [உல]கனான இரதரப் பிரியனேன் இவை
[எ]ந்நெழுத்து இப்படி பணி

67) யால் இவ்வூர் வேட்கோவன் [பொ]ய்யிலிதேவன்னெழுத்து இப்படி
பணியால் இவ்வூர் வேட்கோ

68) வன் நக்கன் முத்தரையன்னெழுத்து. இப்பதின் னேழாவதே
இவ்வே[ா]லை மேற்பட்ட நிலம் நான்

69) மாவரையும் இத்தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் [வடக]ரை
க்கருந்தி[ட்ட]குடி தேவர்க்கு சதுரா

70) தித்த வரை நொந்தா [வி]ளக்கு .. .. .. இத்தேவர்க்கே
யுரித[ா]க குடுத்தேன் பராந்தக

71) ஸ்வஸ்தி குந்தவையேன் இப்பிடிபாடருளிச் செய்ய எழுதினென்
இவ[ர்க்கு] அதிகாரஞ் செய்கின் [ற]

72) சிறுபேறுடையாள் .. .. .. ன் தென்னவன் எரியூர்
நாட்டு வேளானேன் இவை எந்

73) நெழுத்து இப்பரிசு .. .. .. வன் இப்பிராட்டி யார்க்கு
அதிகாரஞ் செய்கின்ற .. நாகமங் கிழ[ா]

74) ன் அங்காடி[ய்யென்] இவை எந்நெ[நெழுத்து]

75) .. யார் கணக்கு பூவனூரு

76) [டை]யான் வரகுணன் சிங்

77) க.. .. .. .. .. .. .. .. .. படி குடுத்

78) .. .. .. .. .. .. .. .. .. வேன் ஆழ்

79) [வா]ர் கரணத்தான் மருதங்குடை

80) டயான் மாயிலட்டி ஆச்ச

81) [தே]னன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 24 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 47/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1410 தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் எண் 584 பாகம் II |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இரண்டாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண். | 7 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் கருவறை தென்புறப்பட்டி

குறிப்புரை: கல்வெட்டில் வரிகளின் இடையிடையே சிற்சில சொற்கள் காணப்படவில்லை. கருந்திட்டைக்குடி உடையதேவர் கோயில் இரண்டாம் பிரகாரத்தில் நந்தியாவட்டம் போன்ற செடிகளை அமைக்க இவ்வூர் நாற்பத்தெண்ணாயிரவர் இறையிலியாக நிலம் அளித்ததையும், குருகாடிக் கிழான் அரயன் விக்ரம சோழனான இராஜகம்பீரன் இந்த ஆவணத்தை எழுதியுள்ளதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) திரிபுவனச் சக்ரவர்த்திகள் சீராஜரா்ஜ தேவர்க்கு யாண்டு உயச கும்ப...

2) நாள் பாண்டிகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்ற .. ..

3) சோழனான ராஜமம்பீர வேளானேன் இந்நா

4) ட்டுக் கருந்திட்டை குடிஉடையார் கருவுணாயகர்க்கு இவ்வூர் நாற்பத்தெண்ணாயிரவர்

5) த்திருத் தொண்டாக இந்நாயனார் கோயில் இரண்டாம் பிரகாரத்திலே நந்தியா வட்டமும்

6) வொன்று முப்பது முதலும் வில்லமும் .. .. .. தம் மாலியன்ற படி ஆக்கப் பறித்து

7).. ஒன்றுக்கு ஆறு .. திருமஞ்சணம் .. க்கு கொள்ளும் குடத்தாலே எடுக்கவும்

8) .. யாக இவர்க்கு விற்ற நிலத்திலே குலோத்துங்கசோழன் எள்ளுழி

9) .. யில் வடவாயில் மயக்கலில் வடக்கடையக் கீழை மே

10) .. ரேனும் இறையிலியாகவும் நீக்கி நின்ற நிலத்திலே இந்நிலத்தால் வந்த கட[மை]

11) இறுத்தபடியெ பின்பும் இந்நிலம் அனுபவிப்பார் ஏற்றி இறுக்கவும்
இப்படி இப்பூ

12) மி உள்ளதனையும் இந்நிலம் இறையிலியாக குடுத்தமைக்கு இவை

13) குருகாடி கிழான் அரயன் விக்கிரம சோழனான ராஜகெம்பிர வேளான் எழுத

14) இத்தன்மம் நோக்குவார் சீபாதம் என்தலை மேலது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 11 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரிபன்மர் | ஊர்க் கல்வெட்டு எண். | 8 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயிற் கருவறை தெற்கு ஜகதி

குறிப்புரை: சிவிகையார் சேரியைச் சேர்ந்த பெண்டாட்டி பொய்யிலி என்பாள் தன் மகன் அரையன் வீரசோழனைச் சார்த்தி நொந்தா விளக்கு ஒன்றை முன்னர் வைத்திருந்ததால் அதில் பாதி விளக்கிற்கான காசினை முள்ளூர் நசிவன் கொடுக்க, அதனைத் திருக்கோயிலுடையார்களான நந்திவேகம்பன், நந்திஅய்யாறன் ஊர்க்கிழான் சத்தி, பகைமதன் சத்ருகாலன் ஆகியோர் பெற்றுக் கொண்டு இடையனிடம் அளித்து விளக்கெரிக்கும் பணியைச் செய்திருத்தல் வேண்டும். ஆயின் யாது காரணத்தாலோ தடைப்பட்டு நிற்கவும், அவ்வாண்டு ஸ்ரீகாரியம் செய்கின்ற மிலட்டுருடையான் மனுகுல மாத்தாண்ட மூவேந்தவேளான் இதைக் கண்டுபிடித்து ஆராய்ந்து, காசு கொண்ட திருக்கோயிலுடையார்கள் செத்துப் போனமையால் அவர்கள் வழிவந்த ஊர்க்கிழான் சத்தி, பகைமதன் சூற்றி, கணபதி சூற்றி ஆகியோரை அழைத்து இப்பரிசு வைத்தார் வைத்த தர்மத்தைக் கெடுத்து உங்கள் முன்னோர் காசு கொண்டமையால் இதற்கு தண்டமாக இன்று முன்பு நிற்கும் மூவரும் இவ்விளக்கினை எரிக்க வேண்டும் என்ற முடிவு செய்ததைப் பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. கல்வெட்டு இடையிடையே சிதைந்தும், இறுதியில் முடிவுறாதும் உள்ளது.

கல்வெட்டு:

1. கோப்பரகேஸரி பந்மற்கு யாண்டு ௰௪ நற்றாவது தஞ்சாவூர்க் கருந்திட்டைகுடி
மஉறாதேவர்க்கு கோவிராசகே[ச]*ரி பந்மற்கு யாண்டு எ வது சிவிகையார்
சேரி இருக்கும் பெண்டாட்டி பொய்யிலி
2. தந்மகந் அரையந் வீரசோழனைச் சாத்தி ஒரு திருனொந்தா விளக்கு வைக்க
அதனில் பாதி விளக்கு[க்]*கு னெய் அட்ட கடவ இன்னாட்டு முள்ளூர்
நசிவனிடை விளக்காலும் வந்த காசுகொண்டு இத்தளித் திருக்கோயி
லுடையார்கள் ந
3. ந்தி வே[க]*ம்பனும் நனி அய்யாறனும் ஊர் கிழாந் சத்தியும் பகைமதந் சதரு
காலனும் இவ்வனைவரும் .. .. கய கோக்காட்டி அரை விளக்காலும் சய.. ..
ஆட்டாலும் தங்களில்லிசைஞ காசு கொண்டு தேவர்க்கு இடையனிட்டு
குடுத்த முதலடையோலையுங் கு[டு]*த்து அரை

4.) க்குச் சுட்டி மேல் பேசாதிதாகவு .. .. தித்தடறங் குடுத்து அரைவிளக்கும்
இவ்வளவும் முட்டிக் கிடக்க இவ்வாண்டு ஸ்ரீகாரியமும் செய்கின்ற
மிலட்டுருடையானான மனுகுல மாத்தாணு மூவேந்தவேளாந் இதுகேட்டு
இரவை திறவரையும் அழைத்து ஆரா[ய்]*ஜு வெளிப்ப
1) ட.. .. .. தேவர்க்கு இட்டுக் குடுத்த முதலடையோலையும் அறுதிக்கேத்
திட்டுங் கட்டுத்து கோக்காட்டி காசுகொண்ட திருக்கோயில்லுடையார்கள்
செத்துப் போனமையில் அவர்களில் ஊர்கிழான் சத்தியும் பகைமதந் சூற்றி
2) யனையும் கணவதி சூற்றியனையும் இப்பரிசு வைத்தார் வைத்த யூத்தை,

கெடுத்து உங்கள் [மு]துக்கள் காசு கொண்டமையில் இதினுக்கு தண்டமாக
இந்று முந்பு நின்ற இம்மூவிரும் இவ்விளக்கு ஒந்றினால் ஆடு
தொண்ணூற்றாறும் நீங்களே கொண்டு **

கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10,11–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | | | |
| அரசன்: | | ஊர்க் கல்வெட்டு எண். | 9 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயிற் கருவறை தென்புறச் சுவர்

குறிப்புரை: கல்வெட்டின் தொடக்கம் பொறிந்து விட்டது. கருந்திட்டைக்குடி மகாதேவர்க்கு மூலபிருத்தியரான சண்டேஸ்வரதேவர்க்கு முள்ளங்கால் என்று வழங்கப்பட்ட நிலத்தைப் பாலாசிரியன் பரமேஸ்வரன், ஸ்ரீராகவன் என்பான் விற்று விலையாவணம் செய்தது பற்றிக் கூறுகிறது. இந்நிலவிலையாவணத்தை ஊர் மத்தியஸ்தன் நானூற்றுவன், ஸ்ரீகிருஷ்ணனான கற்பகப்பிரியன் என்பவன் எழுதப் பலரும் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு:

1. .. .. வது தஞ்சாவூர்க்கூற்றத்துத் த
2. ஞ்சாவூர்க் கருந்திட்டைகுடி உ
3. உறாதேவர்க்கு மூலஸ்ருத்யரான
4. சண்டேஸ்வர தேவர்க்கு நான்
5. விற்றுக் குடுத்த நிலமாவ
6. து இவ்வூர் என் நிலம் முள்ள
7. ங்காலென்று பேர் கூவப்படும்
8. நிலம் பொத்தகப்படி நூற்றி
9. ருபத்தெட்டுக் குழி கொண்டது.
10. ஒருமாவாக வந்த நிலம் .. .. ..
11. முந்திரிகை நிலமும் .. .. ..
12. .. .. க்கு மேற்க்கும் தென்பார்க்கெல்லை இச்செய்
13. கேப் புகுந்தப் பரஷ வாய்க்காலுக்கும் வெள்ளா.. ..
14. .. .. நிலத்துக்கு வடக்கும் மே
15. .. .. ல்லைஎ .. .. னூர் நிலத்துக்குக் கிழக்கும் .. ..
16. .. .. நோக்கிப் போன வாய்க்காலுக்கும் வெள்ளா
    னூர் நில .. .. நிலம் கிழக்கு

17. ஆக இவ்விசைத்த பெருநான்கெல்லையுளகப்பட்ட நிலத்துக்குத் தெர்கு...

18. .. .. ரைக்காணிக் கீழ் எட்டுமா முக்காணியரைக்காணி முந்திரி[கை] .. ..

19. இவ்வூர் ஸஹா வஒவைஷ்டப்படி மூன்றாஙர முடக்கி வந்த மடக்கு [நி]ல முக்காணியரைக்காணி முஜி

20. ரிகைக் கீழ் எட்டு மாக்காணி நிலத்துக்கு இறையிறுத்து உண்ணக்கட[வதா]க விற்றுக்குத்தேன் சண்ணே

21. ஷ்வர ஷேவர்க்கு பாலாஙூயன் பரமேஸ்வரன் ஸ்ரீராகவனேன் [இ]க்காசு உய இக்காசு இருப

22. துக்கும் இந்நிலம் இப்பரிசு விற்று விலையாவணஞ் செ[ய்து] குடுத்தேன் இந்நிலத்

23. துக்கு அதுவே விலையாவணமும் இதுவே

24. பொருள் மாவறுதிப் பொருட் செலவோலையும்

25. இதுவேயாவதாகவும் இதுவல்லது வேற்றாவணமும்

26. பொருட்செலவோ

27. லைக் காட்டக் கடவா

28 . ல்லாதாராகவும் இப்பரி

26. சு விலைக்கற விற்று பொருளறக் கொ

27. ண்டு இக்காசு இருபதுக்கும் விற்று

28. விலையாவணஞ் செய்து குடுத்தே

29. ன் ஸ்ரீச(ண்)ணேஷ்வரஷேவர்க்கு பாலாஙூய

30. ன் பரமேஸ்வரன் ஸ்ரீராகவனேன்

31. இவர் பணிக்க இந்நில விலையா

32. வணம் எழுதினேன் இவ்வூர் மயூ

33. ஷ்டதன் நானூற்றுவன் ஸ்ரீ க்ருஷ்ணனான

34. கற்பகப் பிரியனேன் இவை எ

35. ன் எழுத்து இ[ப்]*படி அறிவேன்

36. வாதுலன் கண்ணன் ஒலொகநாதனேன்

37. இப்படி அறிவேன் பாரதாயன் குஞ்சர

38. மல்லன் நின்றானேன். இப்படி அ

39. றிவேன் பாரதாயன் நின்றான் க--

40. னேன் இப்படி அறிவேன்

41. வைகாஸனன் பாரதுவாஜி வாஸுதே

42. வன் அப்பயேன் இப்படி அறிவே
43. ன் பாரதாயன் காடன் சாத்தனேன்
44. இப்படி அறிவேன் பாரதாயன் பரமே
45. மஸ்வரன் திருவரங்கனேன்
46. இப்படி அறி
40. வேன் பாரதா
41. யன் பாண்ட
42. ன் பாண்டமே
43. னன்
44. இப்படி அறிமே
45. வன் வைகாஸ
46. னன் கைசிகன் சீ
47. தரன் அருமொ
ழியேன்.

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண். 10/1981

மாவட்டம்: தஞ்சாவூர்

வட்டம்: தஞ்சாவூர்

ஊர்: கரந்தை

மொழி: தமிழ்

எழுத்து: தமிழ், கிரந்தம்

அரசு: சோழர்

அரசன்: –

ஆட்சியாண்டு: –

வரலாற்று ஆண்டு: கி.பி.10–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:

முன் பதிப்பு:

ஊர்க் கல்வெட்டு எண். 10

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப தெற்குச் சுவர்

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டுகள்

கல்வெட்டு:

அ.

1) ஸ்வஸ்தி ஸ்ரீ இப்படை இ
2) ல் இருபத்து இ
3) ரண்டு கல்லுகி
4) [வந்] ஆனை காவன் தா
5) யார்ருக்கும் த[ன]
6) க்கும் இருபத்
7) தொன்று காசு பெற்றி
8) .. ற ..

ஆ

1) .. ன்றும் கிழக்கு
2) ..நோக்கிப் போ
3) ..ன வாய்க்காலுக்கு
4) ..ம் வெள்ளானு[ர்]
5) ..நிலத்துக்குத் தெற
6) ..க்கும் ஆக இவ்விை
3) ..சத்த பெருநான்

இ

1. இப்பரிசு இதன் .. .. இளைய சோஸ
2. வெண்டு களத்தில் திரும .. ..
3. இறுப்பித்தும் பிள்ளையும் இப்பரிசே .. ..
4. இந்நிலத்துக்கு ஸபையோம் இ ... இறையிலி உண்ணப்
5. பெறுவாராக.

ஈ

1. நிலம் இறையிலி செய்து குடுத்தே .. ..
2. வூர்க் கூற்றத்து ஸ்ருஹூஷேயம் பேரால் ...
3. முதினேன் இவ்வூர் மயூஷூன் ந ...
4. ஸ்ரீக்ருஷ்ணனான கற்பகப்[பி]ரியனேன்
5. இப்படி அறிவேன் இவ்வூர்...

உ

1. இப்படியறி .. .. .. இப்ப
2. வென் மொ.. .. பொர்
3. கிலியன் நக்க.. .. காட
4. ன்றானேன்.. தளை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 3 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1015 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 44/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1407 தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் எண் 583 பாகம் II |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண். | 11 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவர்

குறிப்புரை: நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துப் பிரமதேயம் பேராலத்தூர் ஸபையார் கருந்திட்டைக்குடி மகாதேவர்க்கு, ஆதிசண்டேஸ்வரர் வசம் எழுபத்தைந்து காசுகள் பெற்றுக் கொண்டு விலைக்கு விற்ற நிலத்திற்கு இறையிலி செய்து கொடுத்தது பற்றியும் அதற்கான எல்லை பற்றியும் இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்ஸ்ரீ கோப்பரகேசரி பந்மரான ஸ்ரீராஜே
2) ந்த்ரசோழ தேவர்க்கு யாண்டு ௩ ஆவது நித்த
3) வினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ப்ரஹ்ம
4) தேயம் பேராலத்தூர் ஸ[பை]யோம் தஞ்சாவூ[ர்]
5) க் கூற்றத்துத் தஞ்சாவூர்க் கருந்திட்டைகுடி
6) மஉற[ா]தேவர்க்கு மூலப்ருத்யரான ஆதிசண்டேவர
7) ர்க்குந் ஒட்டிக் கைத்தீட்டு இட்டு குடு[த்]த பரிச
8) [ா]வது இத்தேவர் பக்கல் நாங்கள் கொண்ட
9) காசு எழுபத்தஞ்சு இக்காசு எழுபத்தஞ்
10) சுங் கொண்டு இத்தேவர்க்கு சஉ(ா)[ரா]தித்த
11) வற் இறையிலி செய்து [கு]டுத்த நிலம் இ
12) வ்வூர் பாலாஸ்ருயன் பரமேஸ்வரன்
13) ஸ்ரீராகவன் பக்கல் விலைகொண்ட
14) நிலம் முள்ளங்கா[ல்] என்று பேர் கூ
15) வப்படும் நிலத்துக்குக் கீழ்பார்கெல்லை வெள்
16) ளானூர் நிலத்துக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை இ

17) ச் செய்க்கே புகுஙப் பரஙு வாய்க்காலுக்கும் வெள்ளானூ
18) ர் நிலத்துக்கு வடக்கும் மேல்பாக்கெல்லை வெள்ளானூ
19) ர் நிலத்துக்குக் கிழக்கும் வடபார்க்கெல்லை கிடங்கில் நி
20) ன்றும் கிழக்கு
21) நோக்கிப் பொ
22) ன வாய்க்காலுக்கு
23) ம் வெள்ளானூ[ர்]
24) நிலத்துக்குத் தெற்
25) க்கும் ஆக இவ்விை
26) சத்த பெருநான்**

** கல்வெட்டின் இறுதிப் பகுதி கட்டடத்துள் மறைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 10 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 42/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | SII Vol.V No.1405 தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் எண் 582 பாகம் II |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | பரகேசரிபன்மர் | ஊர்க் கல்வெட்டு எண். | 12 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபப் பட்டியில் உள்ளது.

குறிப்புரை: பரகேசரியின் 10–ஆம் ஆட்சியாண்டில் கருந்திட்டைக்குடி மகாதேவர் கோயிலில் மதுராந்தகன் கண்டராதித்தன் ஒரு நொந்தா விளக்கெரிக்கத் தொண்ணூற்றாறு ஆடு அளித்தான். இவ்வாடு தொண்ணூற்றாறுங் கொண்டு நிசதம் உழக்கு நெய் மன்றாடி அமரன் குறும்பன் என்பான் அட்டி வந்தான். பின்னர் அடுத்த ஆண்டே அதாவது பரகேசரியின் 11–ம் ஆட்சியாண்டில் அத்தொண்ணூற்றாறு ஆடுகளில் நாற்பத்தெட்டு ஆடுகளைத் தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்டு தந்தையும் மகனுமாக ஒவ்வொருவரும் ஆழாக்கு எண்ணெய் அட்டிய செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்க்கு யாண்டு பத்தாவது தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்ப் புறம்படி கருந்தி
2) ட்டைகுடி ஊஉறா ஷேவர்க்கு மதுராந்தகன் கண்டாதித்தன் வைத்த ஆடு தொண்ணூற்றாறும் கொண்டு நெய்யட்டக் கடவ மன்றாடி
3) அமரன் குறம்பன் இராயெரியால் நொஙா விளக்கொன்றுக்கு அட்டக் கடவ நெய்
4) உழக்கு இவை சாவா மூவாப் பேராடு இவை பன்மாஹேஸ்வரர் ரக்ஷை யாண்டு ௰௧ ஆவது இவ்விளக்கு
5) மதுராந்தகன் கண்டாதித்தன் இடை ஆடு தொண்ணூற்று ஆறு கொண்டு இராசகேசரியால் நிசதம் உழக்கு நெய் அட்ட கடவ எமை
6) யன் அமரன் குறும்பன் அட்டிவாரா நிற்க இவ்வாண்டு இவநிடையே நாற்ப்பத்தெட்டு ஆடுங் கொண்டு நிஸதம் இராஜகேஸரியால் ஆழாக்கு நெய் அடுவேனானேன்
7) அமரன் கருவூர[ா]*நென் இவை சா[வா]* மூவாப்பேராடு இவை பந்மா வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை | தொடர் எண். 13/1981

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 10 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | சக 1764 கலி 4943 கி.பி.1842 |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | | | |
| அரசன்: | | ஊர்க் கல்வெட்டு எண். | 13 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயிற் கிழக்குத் திருச்சுற்று – தரையில் உள்ளது.

குறிப்புரை: மாரியப்ப வாண்டையார் மகன் குப்பமுத்து என்பவன் யாசகம் பெற்று, மக்கள் இட்ட அந்த உபயம் கொண்டு பெரிய பிரகாரத்தின் தளவரிசை வகையறா போட்டதை இக்கல்வெட்டால் அறியலாம்.

கல்வெட்டு:

1) சுவஸ்திஸ்ரீ சாலிவாகன சகா
2) ப்தம் ௵ ௲ எ௱கூ௰ச கலியுகம் ௵ ௲
3) கூ௱ச௰௩ இதின் மேல்ச்செல்லா நின்ற
4) சுபகிறுது ௵ துலா ௴ ௰உ௩ பகல் ௰ னாழிகை கி
5) தனுசு லெக்கணத்தில் மாரி[ய]ப்ப வாண்டையார்
6) குமாரன் குப்பமுத்து கோரிக்கை யாசகம்
7) செயிது வெகுசன உபையத்தினால் பெரிய பிறகாரத்
8) தள வரிசை வகை[ய]றா வேத்து* நி[றை]*றவேறின

---

* வைத்து என்று படிக்கவும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | — |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.11-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 45/1897 |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I Vol V No. 1408 |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண். | 14 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில்.

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டுகள்.

கல்வெட்டு

அ)

1. I. ஸ்வஸ்திஸ்ரீ கோப்ப[ர]
2. [கே]சரி பந்மரான ஸ்ரீராஜேந்த்ர சோ[ழ]
3. [தே]வற்க்கு யாண்டு

ஆ)

1. ன் குகையி.. .. ..
2. இருவாச்சி.. ..
3. ந்நாயனார்க்கு .. .. ..
4. இப்படிசெய்க.. .. .. ..

இ)

1. .. .. முக்காணி அரைக்காணி.
2. [வெ]ள்ளானூர் நிலத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10–11–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கரந்தை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 15 |

இடம்: வசிஷ்டேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத்திற்குள் உள்ள உத்திரம்.

குறிப்புரை: நூறோலை எற்றடிகள் என்பார் உத்திரம் ஒன்றும் பாவுகல் மூன்றும் இட்டதைக் குறிக்கிறது இக்கல்வெட்டு.

<u>கல்வெட்டு:</u>

1) ஸ்ரீநூறோலை எற்றடிகள் ளி

2) ட்ட உத்திரம் + பாக்கல் மூன்று

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 12 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1190 |
| ஊர்: | கோயில்பத்து | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: ஆபத்சகாயேஸ்வரர் கோயில் கருவறை மேற்கு, தெற்கு குமுதம்

குறிப்புரை: மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு. இறையிலி இட்ட திருமுகத்திற்கும் உள்வரிக்கும் கல்வெட்டுப் படியாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி திரிபுவன சக்ரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங்

கொண்டருளின ஸ்ரீ[குலோத்துங்க சோழதேவர்]க்கு யாண்டு உயவது நூர். . .தான

இறையிலி இட்ட திருமுகத்துக்கும் உள்வரிக்கும் படி உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.11–12 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கோயில்பத்து | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம்II எண்.628 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | கோனேரின்மை கொண்டான் | ஊர்க் கல்வெட்டு எண். | 2 |

இடம்: ஆபத்சகாயேஸ்வரர் கோயில் கருவறை மேற்கு, தெற்கு ஜகதி

குறிப்புரை: பூதலூர் வட்டத்து பூதலூரில் எழுந்தருளுவித்த குலோத்துங்க சோழ ஈஸ்வரமுடையார் கோயில் தேவகன்மிக்கும், கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்வானுக்கும் இக்கோயிலுக்கு வேண்டிய நிவந்தங்கள் இறுப்பதற்காக எத்திகிரி கொண்ட சோழ நல்[லூர்.. ..மருத்] துவக்குடி உட்பட்ட இடத்தில் நிலம் அளிக்கப்பட்டு வரி வசூல் செய்யப்பட்டு வந்தது. பின்னர் அந்நிலங்கள் தேவதான இறையிலியாக ஆக்கப்பட்ட ஆணையைத் திருமந்திர ஓலை இராசநாராயண மூவேந்தவேளான் எழுத, சாட்சிக் கையெழுத்தும் பலர் இட்டனர் என்பதை இக்கல்வெட்டால் அறியலாம்.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவந சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் பாண்டிகுலாசனி வளநாட்டு எயில் நாட்டு [வளம்பக்குடித் திருந]ட்டமாடியான விசையாலைய முத்[தரையன்] பூதலூர் வட்டத்து பூதலூரில் எழுந்தருளவித்த குலோத்துங்க சோழ ஈஸ்வரமுடைய

2) தேவர்கன்மிக்கும் ஸ்ரீமாசே[ஹ]ஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வானுக்கும் இத்தேவர்கள் வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக பூதலூர் [வ]ட்டத்து பூதலூரிலே பதி[ன்] வேலி நிலமும் சிற்றாயில் வட்டத்து எத்திகிரி கொண்ட சோழ நல். . . .

3) துவக்குடி உட்பட்ட நிலத்தலே நாற்பதிற்று வேலி நிலமும் எயில் நாட்டுக்குள். . . யிலே நா. . .காலே காணிக் கீழரை நிலமும் முன்[இ]றை கட்டினபடி தவிர்ந்து பன்னிரண்டாவது பசான முதல் தேவதான இறையிலியாக [இட்டும் இன்]

4) னிலத்துக்குக் காணிக்கடன் வேலி ஒன்றுக்கு நெல்லு நூற்றுக் கலத்தினால் பத்தாறாக்கி [அறுபதின்கலமாக] இறைகட்டி வரியிலாரும் வரிக்கூறு செய்வார்களும் எழுத்திட்ட உள்வரி தரச் சொன்னோம். [இந்]நிலம் பன்னிரண்டாவது பசான முதல்

5) இத்தேவர்க்கு தேவதான இறையிலியாகக் கைக்கொண்டு நிவந்தஞ் செலுத்தப்

பண்ணுக எழுதினான் திருமந்திர ஓலை இராச [நாராயண மூவேந்த] வேளான் இவை வேணாடுடையானெழுத்து இவை களப்பாள ராயனெழுத்து. இவை விழிஞத்தரயனெழுத்து இவை நரசிங்க பந்மநெழுத்து இவை அமரகோனெழுத்து

6) இவை காடுவெட்டி எழுத்து. இவை மழவராயனெழுத்து. இவை வயிராதராய னெழுத்து. இவை விழுப்பாதரா[யனெழுத்து]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.11 – 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கோயில்பத்து | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம்II எண்.629 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 3 |

இடம்: ஆபத்சகாயேஸ்வரர் கோயில் கருவறை மேற்கு, தெற்கு ஜகதி

குறிப்புரை: பாண்டிகுலாசனி வளநாட்டு எயிநாட்டு வளம்பகுடித் திருநட்டமாடியான விஜயாலய முத்தரையன் என்பான பூதலூர் வட்டம் பூதலூரில் எழுதந்தருளவித்த குலோத்துங்க சோழ ஈஸ்வரமுடையார்க்குப் பன்னிரண்டாவது பசான முதல் நிலத்திற்கு முன்னர் வரி செலுத்தியது போலல்லமால் அவ்வரிகளை நீக்கி தேவதான இறையிலியாக அளித்தமையும் அதற்குச் சிலர் சாட்சிக் கையெழுத்திட்டிருப்பதும் இக்கல்வெட்டால் அறிய வருகிறது.

கல்வெட்டு:

1) யாண்டு யஉ ஆவது ள ஙள தேவதான இறையிலி இட்ட படிக்கு உள்வரி
பாண்டிகுலாசனி வளநாட்டு எயிநாட்டு வளம்பகுடித் திருநட்டமாடியான
விசையாலைய முத்தரையன் பூதலூர் வட்டத்துப் பூத[லூரில் ]

2) எழுந்தருளுவித்த குலோத்துங்க சோழ ஈஸ்வரமுடையார்க்கு வேண்டும்
நிவந்தங்களுக்கு இறுப்பதாக முன் இறை கட்டினபடி தவிர்ந்து [யாண்]டு யஉ
ஆவது பசான முதல் தேவதான இறையிலி இட்ட பூதலூர் வட்டத்து பூதலூரில் ரு
ய ரு ஸி னால் நில ஓபாதி பழவிறை ௱ ஙா ூ ய அ ள உத உங ஙட உத
நிச்சயித்த ஓபாதி ௱ ஙா ய ஙா உக உங உ உத இப்படி தவிர் [ந்து ]

3) யஉ ஆவது பசான முதல் உக க்கு ௱ ஈ ள ஆக இறை கட்டின காணிக்கடன்
௱ ஆ ரு ளள னால் யகூ ஆக்கி ௱ ககூ ள சிற்றாயில் வட்டத்து எத்த[கிரி ]
கொண்ட சோழ நல்லூர் மருத்துவக்குடி [வி]*ட பட்ட நிலத்து ரு சுய ஸி
னால் நில ஓபாதி பழவிறை ௱ ள உ ய ள உத உங ர நிச்சயித்த ஓபாதி ௱ உக உங எ
இப்படி தவி[ர] யாண்டு யஉ ஆவது பசான முதல் க. . . . .

4) . . ஆக இறை கட்டின காணிக் கடன் ௱ கூ த ள னால் ய க்கு ஆக ௱ உத கூன

எயில் நாட்டுக் குளவகுடி ௫ ௰ய க ௰௨௧ . . . ௱ ௯ ௱ அய ௭ ௯ நிச்சயித்த ௱

௯ ௭ ௯ய ௭ க ௬ இப்படி தவிர யாண்டு ௰௨ ஆவது பசான முதல் ௭ க

க்கு ௱ ௱ ௱ ஆக இறைகட்டின காணிக்கடன் ௱ ௯ எய௯கள னால் ௰௯

ஆக்கி ௱ ௨த ரு ௱ருள

5) யாண்டு ௰௨ ஆவது பசான முதல் தேவதான இறையிலி இட்டமை[ம]க்கு இவை புரவுவரி ஸ்ரீகரண நாயகம் குருகாடி கிழானெழுத்து. இவைபுரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி பெருமங்கலமுடையானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரண நாயகம் ஆருருடையானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரண நாயகம் பிரப. . . பனெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரண[த்து முக]

6) வெட்டி குமாரமங்கலமுடையானெழுத்து. இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி மேலூருடையானெழுத்து. இவை சேதிராயனெழுத்து. இவை வங்கதரயனெழுத்து இவை விராடகுல ராயனெழுத்து. இவை தியதராயனெழுத்து. இவை மேனாட்டரய. . . இவை வாணாயிராயனெழுத்து. இவை பங்களத்தரய னெழுத்து

---

பின்குறிப்பு: தென்னிந்திய கோயிற் சாசனம் – ௬௨௯ எண்ணில் வெளிவந்துள்ள கல்வெட்டின் திருந்திய வடிம் இது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 6 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி-13,14 – ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கோயில்பத்து | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம்II எண்.631 |
| எழுத்து: | தமிழ்,கிரந்தம் | | |
| அரசு: | பாண்டியர் | | |
| அரசன்: | சுந்தரபாண்டியன் | ஊர்க்கல்வெட்டு எண். | 4 |

இடம்: ஆபத்சகாயேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபம்

குறிப்புரை: குலோத்துங்க சோளீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்குக் குடிநீங்காத் தேவதானமாக நன்செய், புன்செய், நத்தம் ஆகிய நிலங்களை 1049 பணத்திற்குப் பலர் விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடை[யபன்மர]ன திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ஆறா. . .

2) . . .ஆவணி மாதத்து ஒன்பதாந் தியதி நாள் பாண்டி குலபதி வளநாட்டு பூதலூர் வட்டத்து பூதலூருடையார் குலோத்துங்க சோளீஸ்வரமுடைய (னாய)நாயநார் திருவருளால் ஸ்ரீநகர் ஸ்ரீகோயில்* ஆதி சண்டேஸ்வர தேவ. . . திருமாஹேஸ்வரரும் தேவர்கன்மி கோயிற் கணக்கரும் சீபாதம் தாங்குவாரும் தேவர் பிரா. . .கோன் நம்மை. . .ரும் இவ. . .பூதலூரில். . .ருடையான் பாண்டி கு. . .

2) . . .க்கும் சாயக்குடை[யான் பாண்]டியதரையற்க்கும் திருநலராய[ற்க் ]கும் குரு. . . கிழையான். . .விழுப்பரை[யற்]கும் மீனவதரையர்க்கும் காட்டுடையான் செம்பியதரையர்க்கும் இவர்கள் [உ]ள்ளுட்டாற்கும் குடிநீங்காத் தேவதாநமாக சண்டேஸ்வரப் பெருவிலைப் பிள்ளைபாண்டிய தேவற்கு வ௲[ர]ணம் பண்ணிக் குடுத்த பரிசாவது. . .இருபத்து ஒன்றாவது நாள் உடையார் [தா]ங்களநுபவித்துப் போனது இவ்வாண்டைப் பசாந முதல் நாங்கள் திருநாமத்து. . . பெருமாள் சுந்தரபாண்டிய தேவற்கு அஞ்சாவது. . . .ம் இ. . .

3) வித்துப் போதுகையில் இ[ந்த]நிலத்தாலே உடல் நக்கத் துண்டமாய் ஆற்றாதொழிகையில் திருனா[ம]த்து. . .ணிச்சிகை. . .பூதலூரில் நாங்கள் [கு]டி னீங்காத் தேவதாநமாக தங்களுக்கு விற்ற விளைநிலமும் னத்தமும் புஞ்செய்க்கும் எல்லையாவது த்ரைலோக்ய மாதேவி வதிக்கு கிழக்கும்..

லைவன் நிக்குடிப் பெரு. . .சோழ வடவாற்றுக்கு தெற்கும் கீழ் . . . ழிக்கும் மண்மதி. . . அம்மை. . .ப்பெருவழிக்கு மேற்கும் கும்மளூர் எல்லைக்கு வடக்கும் இன்னான்கெல்லை நடுவுள். . .நிலத்தி[லும்] முன் திருநாமத்துக்காணி நீக்கி நில. . .ருபத்தரையே நாலுமா. . . இன்னிலம் . . .

4) கெல்லைக்குள்ப்பட்ட நத்தமும் புஞ்செயும் குடிநீங்காத் தேவதானமாக சண்டெஸ்வரப் பெருவிலையாக விற்றுக் குடுத்துக் கொள்வதாந எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்பணம் ஆயிரத்து நாற்ப்பத்து எட்டு இப்பணம் ஆயிரத்து நாற்ப்பத்து எட்டும் கொண்டோம். அஞ்சாவது வரை உட்கொண்ட பரிசாவது திருனாமத்து. . .க்கத் துண்டத்துக்குப் பிள்ளை வாணகோவரையர் அநுதினத்து அதிகாரம் வாணகோவரைய வேளார் வசம் குடுப்பித்த ᐯ ஆ ச ய அ இப்பணம் ஆயிரத்து நாற்ப்பத்தெட்டும் இப்ப. . .

5) இருபதா. . .ரை. . .மாவ. . .தசமும் புஞ்செய்க்கும் இப்பணம் ஆயிரத்து நாற்பத்து எட்டு(டு)ம் விலையாவதாகவும் யிதுவல்லது வேறு பொருள் மாவறுதிப் பொரு[ருளு] மல்லவாகவும் இது[க்கு]ப் சொவோலை காட்ட[க் கடவோம்] இதுவே பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை ஆவதாகவும் [தா] தைமன் [விகூ] யங்களுக்கு உரித்தாவதாகவும் இன்னிலம் யிருபத்தைங். . .னுலு மாவுக்கும் நத்தத்துக்கும். . . செய்க்கும் இப்பணம் ஆயிரத்து. . .

6) னாற்ப்பத்து எட்டும் ஒரு. . .பட்ட பற்றிக் கொண்டு குடிநீங்காத் தேவதானம் . . . . . .வைக் கொண்டு சண்டேஸ்வரப் பெருவிலையாக விற்று விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் பூதலூர். . .விழுப்பரைய. . .குடையார் பாண்டியதரையற்கும் விழுப்பரையற்கும் மீனவதரையற்கும் கா. . .

7) செம்பியதரையற்கும் இவர்கள் உள்ளுட்டாற்கு உடையார் பூதலூருடையார் குலோத்துங்க சோளீஸ்வரமுடைய னாயனார் திருக்கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர் திருவருளால் ஸ்ரீருகூரர் ஸ்ரீமாஹேஸ்வரரும் தேவகன்மி கோயிற் கணக்கரும் பாதந்தாங்குவார். . .தேவரடியார் கைக்கோளர் கைக்கோள முதலிகள் இவ்வனைவோம் ஞான. . .பண்டிதந் எழுத்து குருகுலராய பட்டன் எழுத்து காங்கேயப் பிரமராயன் எழுத்து

8) அகளங்கப் பல்லவரையன் எழுத்து குலோத்துங்கப் பல்லவரையன் எழுத்து

9) கோயில் கணக்கு திருநட்டவேளார் எழுத்து. மத்திய[ஸ்த]ன் எழுத்து

---

• இந்நகர் இக்கோயில் என்று இருத்தல் வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 12–13–ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | கோயில்பத்து | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | – |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 5 |

இடம்: ஆபத்சகாயேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப தெற்குச்சுவர்

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டுகள்

கல்வெட்டு:

அ) 1) . . . பண்ணி அருளின திரிபு[வன]* வீரதேவர்க்கு

2) . . . கணக்கர்க்கு ஜயசிங்க குல. . .

3) . . . சோழப் பே[ர]* ரையனேன் கல்

4) . . . யர்தெ. . .வெட்டி செய்ய. . .

ஆ)

1) . . .கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட. . .வளநாட்டு

2) . . .ண்டு முப்பத்து மூன்றாவது பிள்ளை. . .

3) . . . வளநாட்டு மிசெங் [கி]* ளி நாட்டு முழுக்குடி முழுக்கு. . .

4) . . . ட்டின் படியாவது இவ்வாட்டை

5) . . . டேன் . . .கடவோ. . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | – |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1855 – 1903 |
| ஊர்: | கோயில்பத்து | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம்II எண்.630 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | மராட்டியர் | | |
| அரசன்: | சரபோஜி ராஜா | ஊர்க் கல்வெட்டு எண். | 6 |

**இடம்:** ஆபத்சகாயேஸ்வரர் கோயில் வெளிப்புறத்திலுள்ள சூலக்கல்

**குறிப்புரை:** புதலூர் ஆபத்சகாயேஸ்வரர் கோயில் இறைவனுக்கு ராஜா சரபோஜி அபிஷேகக் கட்டளைக்காகக் கார் நிலம் அரை வேலியும் பசானத்தில் அரை வேலியுமாக தானமளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1) மன்மத ௵
2) தை மீ ௨ ௳
3) [அ] ~ புதலூ
4) ர் ஆபற் சக
5) ாய சுவா
6) மிக்கு ராசா
7) ஸ்ரீசரபே
8) ாசி ராசா
9) அவர்கள்
10) அபிஷேக க
11) ட்டளைகு வி
12) ட்ட நிலம் ௳
13) அடி கோ
14) லால் கா
15) ரில் வேலி
16) அரை பி
17) சானத்தி
18) ல் வேலி
19) அரை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | கலிஆண்டு 4696<br>சக ஆண்டு 1697 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1775 |
| ஊர்: | பழைய ஆர்க்காடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் சமஸ்கிருதம் | முன் பதிப்பு: | - |
| எழுத்து: | தமிழ், கிரந்தம் | | |
| அரசு: | விஜயநகரர் | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: ஆனந்தீஸ்வரர் கோயில் கருவறை தெற்குப்புற ஜகதி

குறிப்புரை: சகஆண்டு கலியாண்டு போன்றவையும், வானியல் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன கி.பி.1775ஆம் ஆண்டு கல்வெட்டு இது. சொல்ல வரும் தகவலை அறிந்து கொள்ள முடியாமல் இறுதி வரிகள் காணப்படவில்லை.

கல்வெட்டு:

1) வாத ஶாகஃ வத்ஶரந் ஶஷவ௲ ௨௯௨ கூ௬ஹேவேந . . . . . . . . . . .

2) சேர்த்த ஸ்ரீகலிப்பக்கர் சதஅ எ௰ ன் மேல் செல்லா நின்ற சாலி வாகந

3) ச்சப்பு கா செல்லாநின்ற ஸ்ரீசெய வருஷம் தையி மாதம் கார்த்தித் திங்கள் கி

4) ழமை பூச சதுர்த்தேசி புனர்பூச நக்ஷத்திரம் முகுர்தம் வெஉய கோகி

5) [அ]நந்த வருஷம் ஆனி மாதம் உயஎஉ சுக்குற வா[ர]*ம் நவமி சுவ[ா]*தி நக்ஷதிரம் ச

6) கும்பர் அம்[ெ]ழுதம் ஆனது நதித்தான குழுத்தி மகன்முது விசனகம் . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | தஞ்சாவூர் | ஆட்சியாண்டு: | 8 |
| வட்டம்: | தஞ்சாவூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13, 14 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | புதுக்கரியப்பட்டி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | – |
| மொழி: | தமிழ் | முன் பதிப்பு: | தென்னந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம் II எண் 586 |
| எழுத்து: | தமிழ் | | |
| அரசு: | – | | |
| அரசன்: | – | ஊர்க் கல்வெட்டு எண். | 1 |

இடம்: உய்யக்கொண்டேஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை: பாண்டிகுலாசனி வளநாட்டுச் சந்திரலேகைப் பண்புக்கு மேற்கும், கோழைத் தலைக்குக் கிழக்கும், காவேரி ஆற்றுக்குத் தெற்கும் ஆக இவற்றுக்கு இடைப்பட்ட அகர, பிரமதேசத்தாரும், நாட்டாரும், இடங்கை தொண்ணூற்றெட்டுச் சமயத்தாருடன் கூடி நிலக் கொடை வழங்கிய செய்தியாக இருத்தல் வேண்டும்.

கல்வெட்டு:

1) ஸ்வஸ்திஸ்ரீ [எ]ட்டாவது மாசி மாதத்து
2) பாண்டி குலாசநி வளநாட்டு சந்
3) திர லேகைப் பண்ப்புக்கு மே
4) ற்கும் கோழைத்தலைக்கு கிழக்
5) கு காவேரி ஆற்றுக்கு தெற்கு அ
6) கரப் பிரமதேசங்களோமும்
7) நாட்டோமும் இடங்[கை] தொண்
8) ணுற்றெட்டுச் சமையத்தோமே
9) கை ஒன்றாக நின்று கல்வெட்டி
